பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper     பக்கங்கள் 08     விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM     மக்கள் தினசரி     PEOPLES DAILY

நாதம் 5     திருவள்ளுவர் ஆண்டு 2025     ஆடி 11     27 - 07 - 94     புதன்கிழமை     ஓசை 159

## வறுமைநிலை நோக்கி விரைந்துசெல்லும் இலங்கை

உலகில் அதி வேகமாக வறிய நிலையை அண்மித்து வரும் நாடுகளிடையே முதலில் குறிப்பிடப்படும் நாடாக இலங்கை இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் விவசாய அபிவிருத்திக்கான நிதியம், வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலமாக பொருளாதார சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக நாட்டின் செல்வந்தர்களுக்கும், வெளிநாட்டு வர்த்தகர்களுக்கும் வசதிகள் மானியங்கள்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் ரோந்து அதிகரிப்பு

### சோதனைகளும் தீவிரம்

(கொழும்பு)

திருகோணமலை நகர்ப் பகுதியில் தீவிர ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நகரின் உள்ளே வரும், வெளியேறும் வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் முக்கியமான பாதைகள் தடை செய்யப்பட்டு ஒரு வழியினால் மட்டுமே நகருக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இதே வேளை விசேட இராணுவ பொலிஸ் அணியொன்று வரவழைக்கப்பட்டிருப்பதாகவும் ஆயுதங்களுடன் திரிபவர்களின் ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் தீவிர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இனக்கலவரம் வெடிக்கலாம் திருமலையில் தமிழர் அச்சம்!

### கோவில்களில் மக்கள் தஞ்சம்

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து திருகோணமலையில் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளதாகவும் அங்கு இனக்கலவரம் ஏற்படும் சூழ்நிலை தோன்றி இருப்பதாகவும் பிரான்ஸ் செய்திநிறுவனம்கூறியுள்ளது.

அங்கு தேர்தலை முன்னிட்டு இனரீதியான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இதனையடுத்து அங்குள்ள தமிழ் மக்கள் பழமை வாய்ந்த இந்துக் கோவில் ஒன்றினுள் தஞ்சமடைந்து வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும்சூழ்நிலையில் அங்கு மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் கிராமப்புற தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாகவும், இதனையடுத்து திருகோணமலையில் பழமைவாய்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் பிரசாரத்திற்கு தடை

(மன்னார்)

மன்னார் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் வேட்பாளர்கள் தம் பாதுகாப்பிற்கென ஆயுதங்கள் வைத்திருந்தால் அவற்றை அப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்த பின்னரே பிரசாரத்திற்காக மக்கள்முன் செல்லவேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் கொட்டேகொட தெரிவித்துள்ளார். வன்னி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தன்னாட்சி அதிகாரங்கள் எவையும் தமிழர்களுக்கு வழங்கப்படமாட்டாது

## ஜனாதிபதி ஆட்சிமுறை தொடரும் ஐ.தே.க.தேர்தல்விஞ்ஞாபன அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் தமிழருக்கென தற்பொழுது இருப்பதைவிட அதிகமான தன்னாட்சி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என்றும், சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதன் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொ

## உலங்குவானூர்தி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா வான்படை உலங்குவானூர்தி ஒன்று இன்று அதிகாலை 12. 30 மணியளவில் அராலி ஊர்காவற்துறைப் பகுதி நோக்கி கவிபர் தாக்குதலை நடாத்தியது.

மேற்படி உலங்குவானூர்தி வான்பரப்பில் சிறிது நேரம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் மோசடித் தேர்தல் நடத்த அரசு முயற்சி

### ஈ. பி. ஆர். எல். எவ். தெரிவிப்பு

யாழ்ப்பாணம் தீவுப் பகுதியில் அரசாங்கம் ஒரு மோசடித் தனமான தேர்தலை நடாத்தவுள்ளதாக, ஈ. பி. ஆர். எல். எவ். பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தொலைக்காட்சி தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்துள்ளார்.

நான்காயிரம் பேரே தற்போது உள்ளனர். மொத்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறி புகுந்தனர்

கொழும்பு ஆயுர்வேத கல்லூரி மாணவர்கள், விடுதி வசதிகள், கல்லூரி நிர்வாகத்தினால் செய்து தரப்படாததை ஆட்சேபித்து, அரசாங்க கட்டடமொன்றில் அத்துமீறிப் புகுந்து அங்கு தங்கியுள்ளனர்.

மாணவர்கள் அமைத்துள்ள விடுதியைச் சூழ பொலிசார், அவர்களை வெளியேறக் கோரி சுற்றிவளைத்துள்ளனர்

## வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த கல்வி சாரா உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகின்றது-

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைத்தவிர ஏனைய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பாதுகாப்பிற்கு பொலிஸ்ராணுவம்இணைவு

டர்பான முடிவு எடுக்கப்படலாம் என்றும் ஐ. தே. க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும்,

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையே தொடர்ந்து நீடிக்கும் எனவும், தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும்போது ஐ. தே. க. இந்த அரசியலமைப்பை பேணும் எனவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த அரசியலமைப்பை மாற்றி ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவது பற்றி ஐ. தே. க. கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வேலையில்லாதவர்களுக்கு தொழில் பயிற்சியும், வடக்கு கிழக்குப் பகுதியில் போரில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு விவசாய நிலமும் வழங்கப்படும் எனவும் ஐ. தே. க. உத்தரவாதம்வழங்கியுள்ளது.

இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் திறந்த பொருளாதாரக் கொள்கை தொடர்ந்தும் நீடிக்கும் எனவும் வறுமை ஒழிப்பு நிவாரணத்திற்காக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் நடைமுறைப் படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்ந்தாலும் பாராளு மன்றத்திற்கு ஜனாதிபதி பொறுப்புடையவராக மாற்றப்படுவதற்கும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து தெளிவானகொள்கைஎதுவும்இல்லை

## ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து விமர்சனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவோ அல்லது இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு தெளிவான கொள்கை குறித்தோ ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடபபட வில்லை என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறு தெளிவில்லாத நிலையில் மீண்டும் இக் கட்சி ஆட்சி அமைக்குமானால் தொடர்ந்தும் இதே நிலை நீடிக்கும் என்றும் அவ் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்

# 'மக்களின் குரல்' ஒலிபரப்பு நேற்றுடன் முடிந்தது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்புச் செய்யப்பட்டு வந்த ''மக்களின் குரல்'' நிகழ்ச்சிகள் இன்று முதல் பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடியும் வரை இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஒலிபரப்பில் பொது ஜன ஐக்கிய முன்னணியும். மற்றும் தமிழ்க் குழுக்களும் ஈ. பி. டி. பியினரால் மோசமாக விமர்சிக்கப்பட்டு வந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் சிறிசேன கூரே குடும்பத்துடன் வெளிநாடு பயணம்?

(கொழும்பு)

அமைச்சர் சிறிசேன கூரே அவரது மனைவி மற்றும் இரு பிள்ளைகள் சகிதம் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாக முன்னாள் சுதந்திரக் கட்சி கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் காரியாலயத்திற்கு தொடர்பு கொண்டபோது அவர் இரண்டு தினங்களாக காரியாலயத்திற்கு வரவில்லை என்றும் முப்பதாம் திகதி வரை அவர் கொழும்புக்கு வெளியே இருக்க விரும்பி வெளியேறி விட்டதாகவும் தெரிய வந்துள்ளது-

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்சாவு



லெப். தயாபரன்

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி முன்மாரிப் பிரதேசம் பன்சேனைப் பகுதியில், கடந்த 23ஆம் திகதி மாலை5.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் தயாபரன் (வடிவேல் பாக்கியசெல்வம், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

வித்துள்ளார்.

அவ் வேளையில், அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; தீவுப்பகுதியில் நாற்பதினாயிரம் வாக்காளர்களில்

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலின்போது பொலிசாருடன் இராணுவத்தினரும் இணைந்து செயற்பட உள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்- இதறகென ஈடுபடுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் முடிந்ததும் சந்திரிகாவை பிரதமர் பதவிக்கு அழைக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு பொ. ஐ. மு. செயலாளர் கடிதம்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதும் அரசியலமைப்பின் படி பிரதமர் பதவிக்கு சந்திரிகா குமாரணதுங்காவை அழைக்க வேண்டும். இதுவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏகமனதான தீர்மானம் என பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. மு. ஜயரட்ண ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று மாலை 5. 20 மணியளவில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட மேற்படி கடிதத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் கட்சி, தேசவிமுக்தி ஜன தா பெரமுன, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் குழு மற்றும் இலங்கைதொழிலாளர் காங்கிரஸ்சம்மேளனம் போன்றவற்றின் பிரதிநிதிகள் கையெழுத்து இட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# ஜே. வி. பி. உறுப்பினர்களை பாது ாக்கக் கோரிக்கை

## றோகண விஜேவீரவின் மனைவி விடுத்தார்

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஜே. வி. பி. உறுப்பினருக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறு இறந்த முன்னாள் ஜே வி பி தலைவர் றோகண விஜேவீரவின் மனைவி சித்ராணி விஜேவீர ஜனாதிபதி டி. பி, விஜேதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது கணவர் மிகவும் பற்றுடனும், உயிர் தியாகத்தினாலும் கட்டியெழுப்பிய இக் கட்சியை சிதைந்து போகாமல் பாதுகாப்பது தனது கடமை என அவர் அவ் வேண்டுகோளில் தெரிவித்து இருப்பதாக ஆரிய புலேகொட தெரிவித்துள்ளார்.

# தேர்தல் கடமைக்கென ராணுவத்தினருக்கு பயிற்சி

(கொழும்பு)

தேர்தல் கடமைகளுக்கு என தெரிவு செய்யப்பட்டுள்ள இராணுவத்தினருக்கு தற்போது விசேட பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் 'லங்காதீப' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கென ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் இவர்களுக்கு கலவரங்களை அடக்குதல், தேர்தல் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பாக பூரண பயிற்சி வழங்கப்பட இருப்பதாகவும், இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது இராணுவ சேவையில் உள்ளவர்கள எனவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை ஒய்வு பெற்ற இராணுவத்தினர், மற்றும் சேவையை விட்டு விலகியவர்களுக்கும் இவ்வாறான விசேட பயிற்சி அளிக்கப்பட இருப்பதாகவும் அவர் அப் பத்திரிகைக்கு மேலும் தெரிவித்துள்ளார்,

# கைக்குண்டு வெடிப்பு இருவர் பலி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பகுதியில் கைக்குண்டு ஒன்று வெடித்ததினால் இருவர் உயிரிழந்தனர்.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரது உறவினர் வீட்டில் நேற்று முன்தினம் கைக்குண்டொன்று தவறுதலாக வெடித்தது எனவும் இதன்போதே இவ்விருவரும் உயிரிழந்தனர் எனவும் தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

17-7-94 அன்று முரசுமோட்டையில் இருந்து மீசாலை செல்லும்வழியில் அடையாள அட்டையும் (அடையாள அட்டை இல:-555104010 V) சிறு தொகை பணத்துடனும் சில பற்றுச் சீட்டுக்களுடனும் சிறிய பேஸ் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8943)

### சூழல் பாதுகாப்பு கலந்துரையாடல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு பகுதியினரின் ஏற்பாட்டில் யாழ். அரச அதிபரின் தலைமையில் கடந்த 16-ம் திகதி காலை 10 மணியளவில் யாழ் செயலகத்தில் மாவட்ட சூழல் பாதுகாப்பு குழு தொடர்பான, கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை அவர்களும், உள்ளூராட்சி ஆணையாளரும், மற்றும் பிரதேச செயலர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும், மற்றும் அரச நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இன்று குடாநாடு பல்வேறு சூழல் தாக்கங்களை எதிர்நோக்குகின்ற போதும் அதிகரித்த கமஇரசாயன பாவனையால் நஞ்சுகலந்த பழவகைகள், மரக்கறிகள், மக்களைச்சென்றடைவதும், அதனால் மக்களுக்கு புதியவகை நோய்கள் ஏற்படுவதும், அத்துடன் விறகுத் தேவைக்காக அதிகளவில் மரங்கள் தறிக்கப்படுவது போல் பெருமளவில் மரங்கள் நடப்படுவதில்லை என்ற இரண்டு விடயங்களுமே, முதன்மையாக இருப்பதனால் இவ் இரண்டு விடயங்களிலும் மக்களுக்கு அதிக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பிரசாரங்களையும் பயிற்சிகளையும் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில் ஒரு குழு அமைக்கப்பட்டு இக்குழு இரண்டு வாரத்துக்குள் ஒரு வருடத்துக்குரிய திட்டத்தை ஒழுங்குபடுத்தி நடைமுறைப் படுத்தவேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

## நினைவு கூருகின்றோம்...

### 27-07-1994..

1983-ம் ஆண்டு இதேதினத்தில் வெலிக்கடைச் சிறையில் சிறை அதிகாரி உதவியுடன் சிங்களக்காடையர்கள் இரண்டாவது தடவையாக மேற்கொண்ட நடவடிக்கையில் படுகொலை செய்யப்பட்ட,

**சிறிக்குமார்** (முத்துக்குமார் சிறிக்குமார்-தேவாலய வீதி, உரும்பராய் கிழக்கு - யாழ்)

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் தமிழர்கள்.

1987-ம் ஆண்டு மன்னார் - பூநகரி ஒல்லாந்தர் கோட்டையில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் அசோக்** (ராஜநாயகம் டேவிட் பாலச்சந்திரன் - மடு உயிலங்குளம் - மன்னார்)

**லெப். துரைமணி** (செபஸ்தியான் மில்டன் எட்வேட் - முருங்கன் - மன்னார்)

**லெப். அலிபா** (அலஸ் யோசப்-நறுவிலிக்குளம், வங்காலை - மன்னார்)

**2-ம் லெப். சேகர்** (செபமாலை சிறீதரன் - அடம்பன் - மன்னார்)

**2-ம் லெப். ரகு** (இராமசாமி விஜயகுமார்- வேப்பங்குளம், அடம்பன் - மன்னார்)

**செந்தூரன்** (சண்முகநாதன் தங்கேஸ்வரன் - 8-ம் கட்டை, உயிலங்குளம் - மன்னார்)

**2-ம் லெப். பெரியதம்பா** (வின்செனட்பிரான்சிஸ் ஞானதீபன் - சென்ஜேம்ஸ் வீதி - இளவாலை)

வவுனியா - பெரியதம்பனைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட,

**தீசன்** (தம்பையா கணேஸ் - தம்பனை - வவுனியா)

1988-ம் ஆண்டு யாழ் - காங்கேசன்துறையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்ட நிலையில் மண்வெட்டியால் அடித்துக் கொலை செய்யப்பட்ட,

**லெப். ராஜு** (சிவஞானசுந்தரம் ஐங்கரன்- ஐங்கரன் வீதி, அளவெட்டி - யாழ்)

காரைநகரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 03 தமிழர்கள். யாழ் - கந்தர்மடச்சந்தியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990-ம் ஆண்டு திருமலை - திரியாய்ப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த,

**நிர்மல்** (அப்துல் நசார் - புடவைக்கட்டு - திருமலை)

**மோகன்** ( - - திருமலை )

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 05 தமிழர்கள்.

மட்டுநகரில் இடம்பெயர்ந்தோர் முகாமொன்றில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன மாவடிவேம்பைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991-ம் ஆண்டு ஆனையிறவில் ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தடைமுகாம் மீது 2-வது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**நிசா** (சுமதி சதாசிவம் - 1-ம் குறிச்சி, தம்பிலுவில் - அம்பாறை)

**கப்டன் நிறையன்** (இராமமூர்த்தி விதுரன் - பன்குடாவெளி - மட்டு)

**லெப். வர்மன்** (பாஸ்கரமூர்த்தி - சுந்தரமூர்த்தி

**சகீந்தா** (சூரியகுமாரி சுப்பிரமணியம் - பம்பைமடுச் சந்தி - வவுனியா)

**லெப். குட்டி** (செபஸ்தியம்மா அலோசியஸ் - வங்காலை - மன்னார்)

**2-ம் லெப். மெடினா-மெடோனா** (செல்வராணி மாயழகன்-பூநகரி- மன்னார்)

**2-ம் லெப். வதனி** (ஹென்சி பத்திநாதன் - தாழ்வுபாடு - மன்னார்)

**பவா** (கதிரித்தம்பி கணேசலிங்கம் - நல்லூர் , பூநகரி - மன்னார்)

**பிருந்தன்** (சின்னராசா ஜெராட் திலகர் - நானாட்டான் - மன்னார்)

**இல்பேட்** (ஞானராசா ஞானதீபன்-இலுப்பைக்கடவை - மன்னார்)

**லெப். சபா** (மாரிமுத்து பத்மநாதன் - பள்ளக்கால் - குண்டகசாலை)

**லெப். கேணல் சரா** (சின்னத்துரை ஜீவராசா - கல்வியங்காடு - யாழ்)

**மேஜர் குகதாஸ்** (இராசரத்தினம் இராஜேந்திரன் - உரும்பராய் வடக்கு - யாழ்)

**மேஜர் சொனி** (சிவஞானசுந்தரம் அசோகன்-மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**கப்டன் ரகீம்** (ஜசாக் டொனால்ட் வீரபாகு-அளவெட்டி தெற்கு - யாழ்)

**கப்டன் நிதி** (இரத்தினம் இலங்கேஸ்வரன் - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - யாழ்)

**கப்டன் கீர்த்தி** ( வீரப்பாபிள்ளை கனகேஸ்வரன் - கொடிகாமம் - யாழ்)

**கப்டன் அல்பேட்** (கந்தசாமி வன்னியசிங்கம் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி - யாழ்)

**கப்டன் சௌகான்** (சிவானந்தன் ஜோய் அன்ரனி பற்றிமாவீதி, பண்டத்தரிப்பு - யாழ்)

**கப்டன் சிவ்ம்-பவான்** (திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன் - உடுப்பிட்டி- யாழ்)

**கப்டன் வினோத்** (கனகராசா பிரபாகரன் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி-யாழ்)

**லெப். உமாசங்கர்-ரவி** (சின்னமணி கென்கியஸ் - குருநகர்-யாழ்)

**லெப். நிமலேந்திரன்-பிரசன்னா** (தங்கவேல் செந்தில்குமரன் - வல்வெட்டித்துறை-யாழ்)

**லெப். அன்பு** (பாலச்சந்திரன் றமணன் அரசடி ஒழுங்கை, தும்பளை-பருத்தித்துறை-யாழ்)

**லெப். வினோத்** (தர்மலிங்கம் தயாளன்-திக்கம், அல்வாய்- பருத்தித்துறை- யாழ்]

**லெப்.கேசியன்** [பரஞ்சோதிநாதன் நியூற்றன் பிரான்சிஸ்- பண்டத்தரிப்பு- யாழ்]

**லெப். நெல்சா** [சரோசினிதேவி சின்னக்குட்டி- கச்சாய் தெற்கு, கொடிகாமம்,யாழ்]

**2-ம் லெப்-மதனா** [சிவமலர் தளையசிங்கம்- கைதடி, நுணாவில், சாவகச்சேரி-யாழ்)

**2-ம் லெப். ஜசீர்மா** [சிவலோஜினி சிவானந்தையர்-அல்வாய் மேற்கு. திக்கம்-பருத்தித்துறை]

**2-ம்லெப்.யகந்தன்** [டானியல் ராஜ்குமார்-அல்வாய் வடக்கு, பருத்தித்துறை- யாழ்]

**2-ம் லெப். வாணன் -குமார்** [நடேஸ் ஜெயக்குமார்- சமாதியடி, உரும்பராய் வடக்கு]

**2-ம் லெப்- மயில்வாகனம்** [சின்னத்தம்பி சுந்தரலிங்கம்-பழையதோட்டம்-வல்வெட்டித்துறை]

**2-ம் லெப். அல்பேட்** [நடராசா கலைச்செல்வன்- தையிட்டி, காங்கேசன் துறை-யாழ்]

**2-ம் லெப் விக்கி** [இரத்தினம் சாந்தவேல்- கெருடாவில் தொண்டமானாறு -யாழ்]

**2-ம் லெப். ஆனந்தன்** [கந்தசாமித்துரை ராஜ

## பரீட்சைக் காலம் குறித்து அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசினால் நடாத்தப்படவுள்ள ஏழு பரீட்சைகள் நடைபெறும் காலங்கள் பற்றிய செய்தியொன்றை, கொழும்பிலிருந்து, யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர், யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதன்படி, பேராதனை பல்கலைக்கழக ஜி. ஏ. கியூ. பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறும். ஜி.எஸ். கியூ. பரீட்சை நடத்தப்படவுள்ள திகதி தீர்மானிக்கப்படவில்லை.

இலங்கை நிர்வாக சேவையின், திறந்த பரீட்சை அடுத்த மாதம் 27-ந் திகதியும்,

**யாழ். பல்கலைக்கழக** மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை அடுத்த மாதம்13-ந் திகதியும், திறமை அடிப்படையிலான பரீட்சை இன்றும் நடைபெறவுள்ளது.

எழுதுவினைஞர்கள் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை அடுத்தமாதம் 25-ந்திகதியும், தட்டெழுத்தாளர் ஆட்சேர்ப்புப் பரீட்சை அடுத்த மாதம் 27-ந்திகதியும்சுருக்கெழுத்தாளர் ஆட்சேர்ப்புப் பரீட்சை அடுத்த மாதம்27-ந் திகதியும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மேற்படி பரீட்சைகள் சில வேளைகளில் பிற்போடப்படலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(பா, தி)

## கலைப்பீட பரீட்சை திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கு ஏற்கனவே இருந்த பரீட்சைத் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

இதன்படி பகுதி 1 கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சை செப்டம்பர் 14இலும், பகுதி 2 மாணவர்களுக்கு ஒக்டோபர் 3லும், பகுதி 3 மாணவர்களுக்கு ஒக்டோபர் 23லும், முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கு நவம்பர் 8ஆம் திகதியிலும் நடைபெறும் என்றும் இத்திகதிகளிலும் மேலதிக மாற்றங்கள் இடம்பெறலாம் எனவும் மேலும் தெரிவித்தார்.

(05)

## கட்சி சார்பற்ற பொலிஸ் அனுப்பக் கோரிக்கை

### தலைமை வேட்பாளர் விடுத்தார்

(கொழும்பு)

மொனராகலை மாவட்டத்திற்கு கட்சிசார்பற்ற விசேட பொலிஸ் பிரிவொன்றை உடனடியாக அனுப்புமாறு பொது ஜன ஐக்கிய முன்னணியின் அம் மாவட்ட தலைமை வேட்பாளர் ஜனாதிபதிக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் தந்தியொன்றை அனுப்பியுள்ளார்.

மொனராகலை மாவட்டத்தில் தற்போது சேவையில் இருக்கும் பொலிசார் அனேகர் கட்சி சார்பில் நடந்து கொள்வதாகவும் இதனால் தனது கட்சியின் ஆதரவாளருக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக தலைமை வேட்பாளர் ரிச்சமன் டி சொய்சா தெரிவித்தார். எனவே இந் நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மகோற்சவம்

## பற்பொடி தயாரிப்பு

கிளிநொச்சிக் கோட்டத்தில் வெண்ணிலா பற்பொடி உற்பத்தி செய்யும் திட்டம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. இச்சிறு கைத்தொழிலை மேலும் விரிவு படுத்துவதற்கான முயற்சியில் கிளிநொச்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இப்போது ஈடுபட்டுள்ளது. அதன் முதற்படியாக இப்போது கனகபுரத்தில் மாதம் ஒன்றிற்கு இருபத்தி ஐயாயிரம் பொதிகள் உற்பத்தியாவதாக அறிவிக்கப்படுகின்றது. இவ் உற்பத்தி

## பேராசிரியர் அ. துரைராசா தங்கப் பதக்கங்கள்

மேற்படி பதக்கங்களை வழங்கும் பொருட்டு, 1994ஆம் ஆண்டுப் பட்டமளிப்பு விழாவிற் பட்டம் பெறவுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பல்துறைத் திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கான இப்பதக்கங்கள் கல்வியிலும், விளையாட்டிலும் ஏனைய சிறப்புச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈட்டிய தேர்ச்சிகளை மதிப்பீடு செய்து வழங்கப்படும்.

முழுப்பல்கலைக்கழகத்துக்குமென ஒரு பதக்கமும் ஒவ்வொரு பீடத்துக்கும் ஒவ்வொன்றாக நான்கு பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை (1) சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி (2) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 20, உவாட் இடம், கொழும்பு-7 (3) யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம், ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு- 13 ஆகிய முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

நிரப்பிய படிவங்களை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு 1994- 08-15ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1994-07-21

(சி-9988)

குடாவெளி - மட்டு)

**லெப். வர்மன்** (பாஸ்கரமூர்த்தி - சுந்தரமூர்த்தி வாழைச்சேனை- மட்டு)

**லெப். சத்தியகுமார்** (பொன்னையா சிவனேசராசா - திருப்பழுகாமம் - மட்டு)

**லெப். பாரதி** (நவரட்ணம் கோபாலப்பிள்ளை-செட்டிப்பாளையம் - மட்டு)

**2-ம் லெப்.ஜெயந்திரன்-ஜெயச்சந்திரன்** (கந்தப்பர் தவராசா-களுவாஞ்சிக்குடி-மட்டு)

**2-ம் லெப். நளினன்** (நாகராசா சிவகுமார் - தன்னாமுனை - மட்டு)

**2-ம் லெப். கஜன்** (கோபாலப்பிள்ளை புஸ்பராஜா - ஈச்சிலம்பத்தை - மட்டு)

**வரதன்** (மாசிலாமணி மகேந்திரன் - பதுளை வீதி, பெரியபுல்லுமலை ஏற்றம் - மட்டு)

**ஆனந்தபாபு** (தங்கராசா நடராசா - துறைநீலாவணை - மட்டு)

**புருஸ்லி-மூர்த்தி** (சீவரத்தினம் சின்னவன்-தாளையடி வீதி, சித்தாண்டி - மட்டு)

**கப்டன் சத்தியராஜ்** (கந்தையா சத்தியசீலன்- நிலாவெளி - திருமலை)

**2-ம் லெப். சுந்தரி** (சுஜிதா தேவநாயகம் - நிலாவெளி - திருமலை)

**2-ம் லெப். நிதி** (செல்வநயினார் சுந்தரராஜன் - கும்புறுப்பிட்டி - திருமலை)

**2-ம் லெப். நிருபன்** (வேலாயுதம் பாலச்சந்திரன் - ஆலங்கேணி, கிண்ணியா-திருமலை)

**கரன்** (வேலாயுதம் சிவனையா - கங்குவேலி, மூதூர் - திருமலை)

**மொரார்ஜி** (அரசரட்ணம் அரவிந்தன் - மூதூர்-திருமலை)

**சுனித்தா** (குஸ்மாவதி கருணாகரன் - குச்சவெளி - திருமலை)

**ஜஸ்மின்** (செல்வமலர் கோபாலப்பிள்ளை-பன்குளம் - திருமலை)

**2-ம் லெப். இளவரசி** (சந்திரபவானி சிவப்பிரகாசம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**பிரதீபா** (ஜெயந்தி பெரியதம்பி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**காயத்திரி** (உமாதேவி சந்திரசேகரம் - விசுவமடு - முல்லைத்தீவு)

**திகில்** (தங்கையா சேரன்-டி.7. திட்டம் -கிளிநொச்சி)

**காண்டிபனி** (சுகந்தினி வேலாயுதம் - கண்டாவளை - கிளிநொச்சி)

**சுகந்தினி** (யோகா கணபதிப்பிள்ளை - பம்பைமடு - வவுனியா)

**2-ம் லெப். ஆனந்தன்** [கந்தசாமித்துரை ராஜவேல்- வேம்படி, வல்வெட்டித்துறை-யாழ்]

**திசைவீரன்** [சற்குருநாதன் சற்குணபேசன், கச்சாய் வீதி, கொடிகாமம்-யாழ்]

**ரகீம்-சகீம்** [நாகலிங்கம் ஜெகதாஸ்- செல்வபுரம், உரும்பராய் தெற்கு, யாழ்)

**வேலுப்பிள்ளை** [யூனியன் கந்தையா கந்தசாமி- சாவகச்சேரி-யாழ்]

**கிர்மானி** (ஜோன் எட்வேட் கெனடி- மவுண்கார்மேல் வீதி, குருநகர் - யாழ்)

**பீலிக்ஸ்** (அருளானந்தம் ரொனால்ட் ஆனந்த்- தொட்டுவை, பலாலி - யாழ்)

**ராஜன்** (குமாரசாமி குணராசா கேணியடி, கொக்குவில் மேற்கு - யாழ்)

**கார்த்திகா** (மேரிகலிஸ்ரா சூசைப்பிள்ளை - சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கு - யாழ்)

**அன்பினி** (விஜிதா சிவனடி - கரணவாய் தெற்கு, கரவெட்டி - யாழ்)

**சிகிலா** (ரஞ்சினி நடராசா-தொல்புரம் மத்தி சுழிபுரம் - யாழ்)

**தங்கமணி** (புஸ்பகலா நடராசா-கரவெட்டி கிழக்கு - யாழ்)

**டட்லியா** (வரலட்சுமி தேவசிகாமணி - வல்வெட்டித்துறை - யாழ்]

**யாழ்மொழி** (விஜயலதாபாக்கியநாதன்-போயிட்டி, இளவாலை-யாழ்)

மட்டு - வாகரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**விவே** [பெர்ணான்டோ உதயராஜ்-ஆரையம்பதி-03- மட்டு)

1992-ம் ஆண்டு மணலாறு - நித்தியவெட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். உலகேஸ்வரன்-கமல்** (தேவதாசன் மோசஸ் - கரடியனாறு - மட்டு]

**லெப். இயல்வாணன்-இதயன்** (யோசப் ஜெயச்சந்திரன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு]

1993-ம் ஆண்டு வடமராட்சி-மந்திகை பகுதியில் 26-7-93 அன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் விழுப்புண்ணடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்போது எமைப் பிரிந்த

**கப்டன் புவியரசன்** (தங்கராசா மோகனதாஸ் - அன்புவழிபுரம் - திருமலை)

## மகோற்சவம்

தெல்லிப்ழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் 9-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் தேர்த்திருவிழா ஆகஸ்ட் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

படுகின்றது. இவ் உற்பத்தியால் குறைந்த விலையில் நுகர்வோர் பெற்றுபயனடைகின்றனர். இவ் உற்பத்தி சுகாதார முறைப்படி மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு இதுவரை 10 பெண்கள் வேலை வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம்

## பரிசாரகர் தேவை

மேற்படி ஆலயப் பாகசாலையில் பரிசாரகராகப் பணிபுரிய விரும்பும் அந்தணர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது பணிகளுக்கேற்ற தகுந்த சம்பளமும் விசேட படிகளும் வழங்கப்படும். 5- 8 - 94 வெள்ளிக்கிழமைக்கு முன்பு,

தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,

என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

25-07-94
(8942)

சிறிலங்கா விமானப்படையினர் திருநெல்வேலிப் பகுதியில் கண்மூடித்தனமாக மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சின் போது கோண்டாவில், கல்வியங்காடு திருநெல்வேலி ஆகிய இடங்களைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் இருவர் உட்பட 04 மாணவர்களுமாக கொல்லப்பட்ட 06 பொது மக்கள்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

@ இக் குறியிடப்பட்ட மாவீரர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சாராமல் இம்மண்ணின் மீட்பிற்காக போராடியவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9983)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# பாடசாலை மட்டத்திலான வலைப்பந்தாட்டப் போட்டி

17 வயதிற்கு கீழ்ப்பட்டோர்

## மெதடிஸ்-சண்டிலிப்பாய் இந்துவுடன் வலுவாகவே மோத வேண்டிவந்தது

மிகுந்த எதிர்பார்ப்புடனும் பரபரப்புடனும் நடைபெற்ற யாழ்மாவட்ட வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கடந்த ஆண்டின் சம்பியனான மெதடிஸ் மகளிர் கல்லூரி அணியும் புதிதாக உருவெடுத்து முதன் முறையாக இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய அணியும் மோதின போட்டியின் ஆரம்ப நிலையில் இரு அணிகளும் மிகுந்த உத்வேகத்துடன் விளையாடின எனினும் சண்டிலிப்பாய் இந்து கிடைத்த சந்தர்ப்பங்கள் பலவற்றை கோலாக்கத் தவறியது இதே வேளை மெதடிஸ் கிடைத்த சந்தர்ப்பங்களை நன்கு பயன் படுத்தி திறமையாக ஆடியது. இடைவேளை வரையான ஆட்டம் மெதடிஸ் அணி சார்பான தாகவே காணப்பட்டது இடைவேளையின் போது 9-5 என்ற நிலையில் மெதடிஸ் முன்னணி வகித்தது

இடைவேளையின் பின் ஆட்டம் தொடங்கியதும் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது இரு அணிகளும் தங்கள் ...

... உத்வேகத்துடன் ஆடத் தொடங்கிய இவ் அணி மளமளவென கோல்களைப் போட்டு மெதடிஸ் அணியினைத் திணறடித்தது

போட்டி மிக மிகப் பரபரப்புக்குள்ளாகியது.

மெதடிஸ் வெற்றி பெறும் என எல்லோரும் எதிர்பார்த்திருந்தவேளை சண்டிலிப்பாய் இந்துவின் உத்வேகமான ஆட்டம் முடிவை மாற்றி விடுமோ என்கின்ற பரபரப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியது- மெதடிஸ் அணியின் கலைவாணியும், சண்டிலிப்பாய் இந்துவின் அமுதாவும் கோல்களைப் போடுவதில் மிகுந்த திறமை காட்டி ஆடினர்- இவ் இருவரின் கோல் போடும் திறமை பலரின் பாராட்டுக் ...

... அரை நேரத்தில்பெற்ற கோல்களுடன் 19-15 என்ற கோல் கணக்கில் மெதடிஸ் மகளிர் அணி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது.

| | |
|---|---|
| 1-ம் இடம் | யா- மெதடிஸ் மகளிர் கல்லூரி |
| 2-ம் இடம் | யா- சண்டிலிப்பாய்இந்து ம.வி. |
| 3-ம இடம் | யா- வட இந்து மகளிர் கல்லூரி |

மெதடிஸ் அணி இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக்கொண்ட அதேவேளை முற்றிலும் புதிய ஒரு அணியாக யாருமே எதிர் பார்க்காத ஒரு அணியாக இறுதிப் போட்டியில் பங்குபற்றிய சண்டிலிப்பாய் இந்து அணி சகலரின் மதிப்பையும், பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டது- இவ்வாறான பாரம்பரியமற்ற புதிய அணிகள் தோற்றம் பெறுவது ...



17 வயதிற்குக் கீழ்ப்பட்ட மெதடிஸ் அணி

## வெற்றிக் கிண்ணத்தைப் பெற கடுமையாக மோத வேண்டிவந்தது

### உடுவில் மகளிர் கல்லூரி அணித்தலைவி

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வழங்கிய 19 வயதிற் குட்பட்டோருக்கான மேஜர் பாரதி நினைவுச் சுற்றுக் கிண்ணத்தை இம்முறை தமதாக்கிக்கொண்டவர்கள் உடுவில் மகளிர் கல்லூரி வலைப்பந்தாட்ட அணியினர் ஆவர். கோட்டம், உபவலயம், வலயம் இறுதியில் மாவட்ட நிலை என்றவாறு பல கடும் படிகளைத்தாண்டி வெற்றியைப் பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி 19 வயதிற்குட்பட்ட அணியினரைச் சந்தித்து உரையாடினோம். இவ்வுரையாடலின் போது கல்லூரி வலைப்பந்தாட்டப் பயிற்றுனர் திருமதி பி. இளங்கோ உடன் கலந்து கொண்டார். அதிபர் அவர்கள் மகிழ்வுடன் இக்கலந்துரையாடலிற்கு அனுமதி அளித்தார்.

அணித் தலைவி நளாயினி சிறீதரன் 93-ல் உபதலைவியாக இருந்தவர் இவர் கருத்துக் கூறும்போது ''கோட்ட மட்டத்தில் 15-17 - 19 வயதிற்குட்பட்ட மூன்று வயதுப் பிரிவுகளிலும் நாமே வெற்றி பெற்றோம் கோட்டமட்டத்திற்கப்பால் 15 வயதுப் பிரிவுப் போட்டிகள் நடைபெறாமையால், உபவலயத்தில் 17 - 19 இரண்டு அணிகளும் கலந்து கொண்டோம் இங்கும் எமதிரண்டு அணிகளும் தெரிவு செய்யப்பட்டன. வலயம் இரண்டில் இறுதியாட்டம் சமமாகவேமுடிவுற்றது. மேலதிக நேர விளையாட்டிலேயே எமது வெற்றிவாய்ப்பு நழுவிப் போயிற்று. மேலதிக நேர விளையாட்டு மிகக் குறுகிய கால வேளையாக இருப்பதுவும், அதோடு முதல் பந்தினை பெறும் வாய்ப்பு இல்லாமற் போனதுமே எம் வெற்றி வாய்ப்பினைப் பாதித்ததுஎனஎண்ணுகிறேன் ஆனால் மாவட்டப் போட்டியில் மீண்டும் எம் திறமையை நிரூபிக்கும் சந்தர்ப்பம் வரும் என நம்பிக்கை கொண்டிருந்தோம். இதேபோன்று மாவட்டப் போட்டியில் முதல் ...

... யாட்டம் மெதடிஸ்ற் மகளிர் கல்லூரியுடன் வந்தது- அவர்களுடன் கடுமையாக மோதி 20 - 16 என்றவாறு இவ் வருட வெற்றிக் கிண்ணத்துக்கு உரித்துடையவரானோம்.''

உங்கள் அணி வீராங்கனைகளைப் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள் என்றபோது ''ஒவ்வொருவரும் தன் திறமையை முழுமையாக வெளிப்படுத்தினார்கள் எமது வெற்றி ஒரு கூட்டு முயற்சியே எமது வெற்றியில் எல்லோருக்குமே சரிசமமான பங்குண்டு'' என்றபோது, உபதலைவி சுமித்திராகுறுக்கிட்டு கருத்துக் கூறினார் ''நாங்கள் ஒரு அணியாக இணைந்தது இப்பொழுதல்ல 15 வயதுக்குட்பட்ட அணியாக இணைந்ததில் இருந்து இன்று வரை எமதுஅணியில் நாங்களேதொடர்ந்து ஆடி வருகின்றோம். இதனால் எம்மிடம் ஒரு ஒழுங்கமைப்பு இருக்கின்றது. அதாவது சென்ரர் தர்மிலா பந்தை எடுத்தால் பின்னர் நான் பந்தைப் பெறுவேன் இவ்வேளை நிச்சயம் அடுத்த இடத்திற்கு சிவகாமி வருவார். வருவாரா இல்லையா என்பதைச் சிந்திக்காமலே பந்தை குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்பும் வகையில் எமது பயிற்சி அமைந்துள்ளது. அடுத்துப் பந்து பெறுபவர் அங்கவை. அவர் ஒரு சிறந்த சூட்டர் எனப் பெயர் பெற்றவர். இவ் வகையில் தான் நாம் ஆடிக்கொண்டு வருகின்றோம். இம்முறை பெற்ற வெற்றியில் வீராங்கனைகள் அனைவருமே பெரும் புளகாங்கிதம் அடைந்திருப்பதாக உரையாடலின் போது அறிந்து கொள்ள முடிகிறது.

தொடர்ந்து பயிற்றுநர் திருமதி பி. இளங்கோவிடம் கருத்துக் கேட்டோம். ''வலைப்பந்தாட்டம் என்பது எம்முடன் இணைந்ததொன்று நீண்டகாலப் பாரம்பரியம் கொண்டது'' எனும் இவர் உடுவில் மகளிர் கல்லூரியிலேயே 15 வயதிற்குட்பட்ட பிரிவில் இருந்தே அங்கத்தவராக இருந்தவர் அகில இலங்கை வலைப்பந்தாட்டப் போட்டி இங்கு நடைபெற்ற போது கல்லூரிக்காக விளையாடியவர். மேலும் தற்போதைய அதிபரிடம் வலைப்பந்தாட்டம் பயின்றவர். இன்று உடுவில் மகளிர் கல்லூரி பயிற்றுநராகப்பெருமை பெறுபவர் அவர் தொடர்ந்து கூறுகிறார் ''இம்முறை நாங்கள் மொத்தம் 18 ஆட்டங்களில் பங்கு கொண்டோம். எமது அணி கடந்துபோன ஆட்டங்களில் திறமையை அதிகரித்துக் கொண்டே வந்ததால் இம்முறை வெற்றிக்கிண்ணத்தைப் பெறலாம் என்ற நம்பிக்கைஇருக்கத்தான் செய்தது. அதோடு எமது அணியின் ஒரு சிறப்பு அவர்களுடைய வேகம் வலைப்பந்தாட்டம் வேகமானதொரு ஆட்டம். இதனால் நாம் எமது வீராங்கனைகளை வேகமான ஒரு ஆட்டத்துக்கே பழக்கப்படுத்திக் கொண்டு வந்தோம். அது பலனளித்தது. ஒன்றைக் குறிப்பிட வேண்டும் இந்த அணி 93 தவிர வேறெப்போதும் தோல்வியைத் தழுவவில்லை - 15 வயதிற்குட்பட்ட அணியில் இருந்து இன்றுவரை இவர்களேஆடிவருகிறார்கள்'' என்று கூறும் இவர் அதிபர், பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளை மிகவும் நன்றியுடன் குறிப்பிடுகின்றார் ''அவர்களின் ஆதரவும் ஆர்வமும் மிகப்பெரிது தனியார் பாடசாலையாக எமது கல்லூரி இருப்பதில் பல சிரமங்கள். ஆனால் அவற்றை மேவி எம்மை உற்சாகப்படுத்துபவர்கள் இவர்கள்தான்'' என்கிறார்

பெரும் பூரிப்புடன் அமர்ந்திருந்த அதிபர் அவர்களிடம் பேச்சுக்கொடுத்தோம் ''60ம் ஆண்டுக்கு முன்பே எமது கல்லூரியில் வலைப்பந்தாட்டம் ஆரம்பித்துவிட்டது ஆனால் 60-ன் பின் இன்றுவரை ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒரு வயதுப் பிரிவில் நாம் சம்பியன் பட்டம் பெற்றே வந்திருக்கிறோம்'' என்கிறார் மேலும் ''சிறந்த பல வீராங்கனைகளை உருவாக்கியது எமது கல்லூரி. இலங்கை அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட தேவமனோ, பிரேமரூபினி, ஜெனித்ரா எல்லோருமே எமது பாடசாலை பிள்ளைகளே

( 7 ஆம் பக்கம் பார்க்க )

## உடுவில் மகளிர் கல்லூரி - மெதடிஸ் இறுதிவரை போட்டியிட்டன

யாழ் மாவட்ட பாடசாலைகள் வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் இரு பலம் மிக்க அணிகளான மெதடிஸ் அணியும் உடுவில் மகளிர் அணியும் மோதின. கடந்த ஆண்டின் சம்பியனான மெத ...

... தர்ப்பங்களையெல்லாம் கோலாக்குவதில் வெற்றிகண்டனர்- உடுவில் மகளிர் அணியின் அங்கவை, தர்மிலா ஆகியோரின் ஆட்டத் திறமை பலரின் பாராட்டுக்குரியதாயிருந்தது- மெதடிஸ் அணியின் ...

... அணியின் கோல் போடும் திறமையை அதிகரித்ததெனலாம்- ஆட்டம் தொடங்கியதும் இரு அணிகளும் வெற்றி பெற்று விட வேண்டும் என்ற உத்வேகத்துடன் ஆடின- எனினும் மெதடிஸ் அணியின் ...

ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது இரு அணிகளும் தங்கள் உத்திகளை மாற்றி எதிரணியினை திணறடிக்கத் தொடங்கின ஆரம்பத்தில் மெதடிஸ் அணி கோல்களைப் பெற்றதும் அடுத்த சில நிமிடங்களில் சண்டிலிப்பாய் இந்துவின் ஆட்டவேகம் அதிகரித்தது புதிய

இருவரின் கோல் போடும் திறமை பலரின் பாராட்டுக்குரியதாக அமைந்தது- இவ்வாறாக இரு அணிகளும் சளைக்காது ஆடிக்கொண்டிருந்தபோது ஆட்டம் முடிவுக்கு வந்தது- இரண்டாவது அரை நேரத்தில் இரு அணிகளும் 10-10 என்ற சமநிலையில் இருந்தன- எனினும்முன்

அணிகள் தோற்றம் பெறுவது யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டம் எதிர்காலத்தில் சிறப்புறுவதுடன் பல சிறிய பாடசாலைகளுக்கு நம்பிக்கையையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் எனலாம்.

தோம். இதேபோன்று மாவட்டப் போட்டியில் முதல் ஆட்டமே சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியுடன் வந்தபோது எம் திறமையை நிரூபிக்க இது நல்லதொரு சந்தர்ப்பம் என எண்ணிக் கொண்டோம் ஏனெனில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் பலமானதொரு அணி- இறுதி

ஆண்டின் சம்பியனான மெதடிஸ் அணியும் 2-ம் இடத்தை பெற்றுக் கொண்ட உடுவில் மகளிர் அணியும் மீண்டும்

தது- மெதடிஸ் அணியின் கோல்போடும் சந்தர்ப்பங்கள் பல வீணடிக்கப்பட்டன- இதன் காரணமாக ஆட்டத்


மெதடிஸ் அணியின் ஆட்டம் முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருந்தது- இரு அணிகளும் ஒன்றுக்கொன்று ஈடு

# கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி; பல்கலை. 'A' அணி சம்பியனானது


பிரபல்யமான விளையாட்டுக்கள் அனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து விளையாட்டுத் துறையைத் துரித வேகமாக அபிவிருத்தி செய்து வரும் யாழ் மாவட்டத்தில் புகழ்பெற்ற விளையாட்டுக்களில் ஒன்றான கூடைப் பந்தாட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமை கவலைக்குரிய தொன்றாகும். எவ்வாறாயினும் அண்மைக் காலங்களில் பல்வேறு நிறுவனங்களாலும் விளையாட்டுக் கழகங்களாலும் நடாத்தப்பட்டு வரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் யாழ் மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்திற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகின்றன.

இந்த வகையில் யாழ் பல்கலைக்கழகவிளையாட்டு அவையினால் வருடா வருடம் நடாத்தப்பட்டுவரும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி இந்த ஆண்டும் மிகச் சிறப்பாக யாழ் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட விளையாட்டுத் திடலில்கடந்த20-6-94 — 08.07-94 வரையான காலப் பகுதியில் நடந்து முடிந்தது. இச்சுற்றுப் போட்டியில் 10 ஆண்கள் அணிகளும் 4 பெண்கள் அணிகளும் பங்கு பற்றின. இரு வகை அணிகளும் A, B குழுக்களாக பிரிக்கப்பட்டு முதல் சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டது. இந்த வகையில் ஆண்கள் அணியில் A குழுவில் 'சென்றலைட் சொக்ஸ்', யாழ்ப்பாணக் கல்லூரி, 'பற்றீசியன் கிறீன்ஸ்' 'ஜொணியன்ஸ் றெட்ஸ்', பல்கலைக்கழக 'B' அணியும், B குழுவில் பல்கலைக்கழக 'A', ஓல்ட் கோல்ட்ஸ், பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் ஜொணியன்ஸ் பிளக்ஸ் (Blacks), பல்கலைக்கழக ஊழியர் அணியும் அங்கம் வகித்தன. பெண்கள் அணியில் A குழுவில் பல்கலைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)



பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட 'A' அணியினர்



19 வயதிற்குட்பட்ட உடுவில் மகளிர் கல்லூரி அணி

இவ் ஆண்டில் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டமை இவ் அணிகள் தங்கள் நிலலையைத் தொடர்ந்தும் பேணி வந்திருக்கின்றமையை எடுத்துக் காட்டுவதாகும் கடந்த ஆண்டின் முதலாம் இடத்தை தக்க வைக்கும் முயற்சியில் மெதடிஸ் அணியும் தாம் இழந்த 1-ம் இடத்தைப் பெறுவதற்கான போராட்டத்தில் உடுவில் மகளிர் அணியும் களத்தில் இறங்கின.

ஆட்டம் ஆரம்பமாகியதும் விளையாட்டு உடுவில் மகளிர் அணி சார்பானதாகவே அமைந்திருந்தது- உடுவில் மகளிர் அணியின் வேகமான விளையாட்டுக்கு ஈடு கொடுக்க முடியாத மெதடிஸ் அணி தற்காப்பு ஆட்டத்தை ஆடும் அணியாகவே காணப்பட்டதெனலாம்- உடுவில் மகளிர் அணி தனக்குக் கிடைத்த சந்தின் முன் அரை நேரமும் உடுவில் மகளிர் அணியின் சார்பாகவே அமைந்திருந்தது- உடுவில் மகளிர் அணியின் உத் வேகமான ஆட்டம் இரசிகர்களுக்குப் பெருவிருந்தாக

| | |
|---|---|
| 1-ம் இடம்:- | யா- உடுவில் மகளிர் கல்லூரி |
| 2-ம் இடம்:- | யா- மெதடிஸ் மகளிர் கல்லூரி |
| 3-ம் இடம்:- | யா- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |

அமைந்திருந்தது- இடைவேளையின்போது உடுவில் மகளிர் அணி 11-4 என்ற நிலையில் முன்னிலை வகித்திருந்தது

இடைவேளையின்.பின் ஆட்டம் தொடங்கியபோது மெதடிஸ் அணியினர் தம் அணியில் ஒரு மாற்றத்தைச் செய்திருந்தனர்- இம்மாற்றம் மெதடிஸ் அணிக்கு ஈடு கொடுத்து மாறி மாறி கோல்களைப் போட்டுக் கொண்டேயிருந்தன- எனினும்மெதடிஸ் அணியின் ஆட்டம் வேகம் பெறத் தொடங்கியதும் அதற்கு ஈடு கொடுக்க முடியாது உடுவில் மகளிர் அணி திணறியதெனலாம்- மெதடிஸ் அணி வேகமாக கோல்களை போடத் தொடங்கியதும் ஆட்டம் மிகுந்த பரபரப்புக்கும் இரசிப்புக்கும் உரியதாயிற்று- முதல் அரை நேரத்தில் பின்தங்கி நின்ற மெதடிஸ் அணி, இரண்டாவது அரை

(7 ஆம் பக்கம் பார்க்க)

# K.C.C.C. வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## கிராஸ் கொப்பர்ஸ் - சென்றலைட்ஸ் பலமாக நடந்த மோதல்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் இயல்பாகவே மிகவும் கவர்ச்சிகரமானவை. இவ்வருடம் நடைபெற்ற சில போட்டிகள் மிக விறுவிறுப்பாக அமைந்து ரசிகர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், சிறப்பாகஅவை பற்றி விவாதிக்கவும், பேசி ரசிக்கவும் வழிவகுத்துள்ளன, இவ்வகையில்குறிப்பிடத்தக்கதொரு ஆட்டமாக அமைந்தது KCCCயினர் நடாத்துகின்ற சுற்றுப்போட்டியில் இடம் பெறற கிராஸ் கொப்பர்ஸ், சென்றலைட்ஸ் அணியினர்கலந்து கொண்டதொரு ஆட்டமாகும்.

இவ்விரு அணிகளிலும் அனுபவம வாய்நத வீரர்களுடன இளம் ஆட்டக்காரர்களும் இணைந்து ஆடியமை அணிகளின் தரத்தை மேலும் உயர்த்துவதாக அமைந்தது. சென்றலைட்ஸில் சண்முகலிங்கம், சாந்திகரன், அரசரட்ணம், கிராஸ்கொப்பர்ஸ் அணியில் சிறீதரன், றொகான் இராசசிங்கம், கிருபாகரன் ஆகியோர் அனுபவமிக்க சிறந்த வீரர்களாவர்

இப்போட்டியில் கிராஸ் கொப்பர்ஸ்தலைவர் எஸ்.ரஜீவன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்கவே சீராளன், ரஜீவன் ஆகியோர் ஆரம்பத துடுப்பாட்ட வீரர்களாக மைதானத்தினுள் நுழைந்தனர். இவர்கள் இருவரும சிறப்பாக ஆடி 50 ஓட்டங்களைச் சேகரித்து இருந்த நிலையில் ஒன்பதாவது ஓவரில் ரஜீவன் ஆட்டமிழந்தார். ரஜீவன் அணிக்காக 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தார. இதேவேளை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நல்லதொரு அடித்தளத்தையும் இட்டிருந்தாாகள். பின்னர் 16-வது ஓவரில் கணேஸ்குமார் 84 ஓட்டங்கள என்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்துசென்றறொகான் சில பந்துகளைச் சந்தித்து அதிரடியாக இரண்டு ஆறுகள். இரண்டு நான்குகள உட்பட 23 ஓட்டங்களைப் பெற்றார். இவர் ஆட்டமிழந்தபின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சீராளன் பெறுமதிவாய்ந்த 38 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்து சென்றார். கிருபாகரன தன் அணிக்காக ...

...ண்டகிராஸ்கொப்பர்ஸ்அணியினர் 27 ஓவர்களில் ஆறுஇலக்குகளை மட்டும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். சென்றலைட்ஸ் சார்பில் சதீஸ், ரகுதாஸ் தலா இரண்டு இலக்குகளையும், சாந்திகரன் அருணோதயன்தலாஒரு இலக்கினையும் கைப்பற்றியிருந்தார்கள்.

சென்றலைட்ஸ் தம் ஆட்டத்தை ஆரம்பித்த விதம் அதிரடியாகவே இருந்தது. இரண்டு ஓவாகளில் ஜித், ரமேஸ் இருவரும் 20 ஓட்டங்களைச் சேகரித்திருந்தனர். அணி 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை 4 வது ஓவரில் ரூபராஜ் ரமேசின் இலக்கைக் கைபபற்றிக்கொண்டார். இதன்பின் கிராஸ்கொப்பர் பந்து வீச்சாளர்கள் அற்புதமாகப் பந்து வீச ஆரம்பித்தார்கள்: 6 வது ஓவரில் மீண்டும் ரூபராஜ், ஜித்தின் இலக்கைக் கைபபற்றினார். 8 வது ஓவரில் ரூபராஜ் சுரேசின் இலக்கை நேரடியாகத் தாக்கி இன்னொரு இலக்கைக் கைப்பற்றினார். ரூபராஜ் இந்நிலையில் தன் அணிக்கு ஒரு நம்பகமான நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார். என்பது குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

நான்காவது சோடியாக சாந்திகரனும் ரகுதாசும் இணைந்து ஆடி அணி 77 ஓட்டங்கள பெற்றபோது ரஜீவன்,ரகுதாசின் இலக்குகளை நேரடியாக வீழ்த்தி ரகுதாசை வெளியேற்றினார். பின்னர் சதீஸ், சாந்திகரனுடன் இணைந்து கொண்டு ஆட ஓட்ட எண்ணிக்கை 17 ஓவர்களில் 100 என்றவாறு அமைந்தது. ரஜீவன் மீண்டும் நேரடியாக இலக்கினைத் தாக்கவே, சாந்திகரன் வெளியேற வேண்டியேற்பட்டது. சாந்தி அணிக்காக 20 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்திருந்தார். சதீஸ் சிறப்பாக ஒருபுறம் ஆடிக் கொண்டிருக்க, அரசரட்ணம், அருணோதயம் ஆட்டமிழந்து சென்றனர் சண்முகலிங்கம், சதீஸ் இருவரும் தற்போது சோடிசேர்ந்து ஆடிக்கொண்டிருக்க 42 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சதீஸ், சிறிதரனால் நேரடியாக இலக்குத் தாக்கப்பட்டு வெளியேறினார். சதீஸ் சிறப்பாக ஆடியமை இங்கு குறிப்பிடத்தக்கது...

...டைந்திருந்தன. 8 விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டிருந்தன. இந்நிலை ஊசலாடும் ஒரு நிலையாகும். ஆறு ஓவர்களில் 47 ஓட்டங்கள் சென்றலைட்சுக்குத் தேவை. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இது இயலாததல்ல. இவ்வேளை பத்தாவது ஆட்டக்காரராக நுழைந்த அன்றியூட் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, தற்போதைய நிலை சென்றலைட்ஸ் 24 ஓவர்களில் 9 இலக்கு இழப்பிற்கு 156 ஓட்டங்கள் இறுதிச் சோடியாக சண்முகலிங்கமும் பிரபாகரனும் மிக அழுத்தத்தின் மத்தியில் ஆட ஆரம்பித்தனர் சண்முகலிங்கத்தின் சிறப்பாட்டம் இந்நிலையில் சென்றலைட்சைக் காப்பாற்றியது எனலாம். சண்முகலிங்கம் தான் பெற்ற இருபந்துகளை ஆறுகளாக மாற்றியமை ஆச்சரியப்படத்தக்க வகையில் ஆட்டத்தைசென்றலைட்ஸ் பக்கம் திருப்பியது. இறுதி ஓவரில் 4 ஓட்டங்கள் என்ற நிலைக்கு அணியைக் கொண்டு வந்தவர் சண்முகலிங்கமே சிறீதரன் வீசிய இறுதி ஓவரின் முதலாவது பந்தில் சண்முகலிங்கம் ஒரு ஓட்டம் பெற்றார். பின்னர் மூன்றாவதுபந்தில் பிரபாகரன் தன்திசையில் விக்கெட்டுக்குப் பின்னால் பந்தைத் தட்டிவிட அங்கு பந்தை யாரும் எடுக்காத நிலையில் 3 ஓட்டங்கள் பெறப்பட்டன. இந்த மூன்று ஓட்டங்களைச் கிராஸ்கொப்பர் கொடுத்தமை பற்றிப் பரவலாக ரசிகர்கள் இவ்வணியைக் குற்றம் சாட்டியமை குறிப்பிடத்தக்கது. இதைவிட தடுத்திருக்கக் கூடிய 3 நான்குகள் தவறவிடப்பட்டமையும் இவர்களுக்குப் பாதகமாக அமைந்திருந்தது. ஆரம்பத்தில் தம் கவனயீனத்தால் இழக்கும் ஒவ்வொரு ஓட்டமும் இறுதியில் அணிகளை வேதனையுடன் சிந்திக்க வைக்கும் என்பதற்கு இவ்வாட்டம் ஒரு உதாரணம். கிராஸ்கொப்பர்ஸ் அணிக்கு ஒரு படிப்பினை கிராஸ்கொப்பர்ஸ் சார்பில் ரூபராஜ் 3 இலக்குகளையும், சிறீதரன், கிருபாகரன், ரஜீவன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் பெற்றுக் கொண்டனர் எது எவ்வாறாயினும் இறுதிவரை சென்றலைட்சின் வெற்றி ...

## ஜொலிஸ்ரார் இளம் அணி ஜொனியன்ஸுக்குகொடுத்தஅதிர்ச்சி

இவ்வருடம் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் ஆட்டங்களின் பரபரப்பும், எதிர்பாராத திருப்பங்களும் அதிர்ச்சிகளும் ஓயமாட்டாது போலத் தெரிகின்றது. இனி வரும் ஆட்டங்களில், எதனையும் தவறவிட கிரிக்கெட் ரசிகர்கள் தயாராக இல்லை. அதேவேளை தவறவிட்ட ஆட்டங்களுக்காக மனம் வருந்தும் ரசிகர் அனேகர்.

KCCCயினர் நடாத்தும் மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டமொன்று யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஜொனியன்ஸ் அணி எதிர் ஜொலிஸ்ரார் அணியினர் பங்கு கொண்ட ஆட்டம் தா



அது. அநேகமாக ஜொலிஸ்ரார் அணியின் ஒரு பாங்கு உண்டு. திறமாக அடித்தாடும் வீரர்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் இவ்வணி, மற்றத் துறைகளில் பெரும் வீச்சைக் காட்டுவதாக இருப்பதில்லை. அதேவேளை சுற்றுப்போட்டிகளில் அவர்களின் நிரந்தர வீரர்களையும் கண்டது அரிதாக இருக்கும். இம் முறையும் ஜொலிஸ்ரார் அணியினர் களத்தில் இறங்கிய போது இவர்கள் தம் விளையாட்டுப் பாரம்பரியத்தைப்பேணு வதற்காக மட்டும் அணியைக்களத்தில் இறக்கியிருக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தால் அதில் பிழையில்லை.

ஜொனியன்ஸ் துடுப்பெடுத்தாட ஆரம்பித்து ஆட்டத்தை சாதாரணமாகவே கொண்டு நடாத்திக் கொண்டிருந்தார்கள். பரிசித்துவும் நிர்மலானந்தனும் 33 ஓட்டங்கள் வரை வசதியாக ஆடிக் கொண்டிருந்தார்கள். இவ்வோட்ட எண்ணிக்கையில் ஞானசேகரனின் (ரமணன்) பந்துவீச்சில் பரிசித்து கொடுத்தபிடியை விக்கெட் காப்பாளர் அரவிந்தன் தவறவிடவில்லை. அதன்பின்னர் ஜொனியன்ஸ் இலக்கு 37-57-63.67-72-80-86-91-92 என்றவாறு கிடுகிடுவெனச் சரிந்தன.

23.5 ஓவர்களில் ஜொனியன்ஸ் சகல இலக்குகளையும் 92 ஓட்டங்களுக்கு இழந்து நின்றார்கள். அதன் பின்னர் ஜொலிஸ்ரார் இவ்வெண்ணிக்கையை 26.4 ஓவர்களில் பெற்று அரை இறுதிப்போட்டிக்குத் தகுதியாயிற்று.

புதிய இளம் வயது வீரர்கள் 7 பேரைக் கொண்ட ஜொலிஸ்ரார் அணியால் இது எப்படிசாத்தியமாயிற்று? பலமான ஜொனியன்ஸ் அணியைத் தம் கட்டுக்குள் கொண்டுவர இவர்களால் எப்படி முடிந்தது? ஜொலிஸ்ரார் வீரர்களின் பந்துத்தடுப்பு உச்சத் திறமையில் அமைந்திருந்ததை சகல ரசிகர்களும் சிறப்பாக அவதானித்தார்கள். அணியினர் முழுமையாக களத்தில் இயங்கினார்கள். துடுப்பில் படும் ஒவ்வொரு பந்தும் தன்னை நோக்கி வரும் என்ற உணர்வில்செயற்பட்டார்கள். நல்ல பந்துவீச்சிற்கேற்ப வீரர்கள் எடுத்த சில பிடிகள் மறக்கமுடியாதவை லோங் ஓன் பகுதியில் சிவராஜ் எடுத்த பிரசாந்தனின் பிடி அபாரமானது. அதேபோல மிட்ஓன் பகுதியில் சுழன்று ஓடிச்சென்று சசிசேகரன் எடுத்த காண்டீபனின் பிடியும் அலாதியானது- இந்த இரண்டு இலக்குகளும் எவ்வளவு பெறுமதியானவை என்பதை ரசிகர்கள் உணர்வார்கள்- வாகீசனின் இலக்கை வீழ்த்த சிவராஜ் எறிந்த எறியானது ரசிகர்களைத் திடுக்கிட வைத்தது- ஞானசேகரன் மிகச்சிறப்பாக பந்து வீசி நான்கு இலக்குகளைக் கைப்பற்றிக் கொண்டார்- ஞானசேகரனின் பந்து வீச்சைப் பொறுத்தவரை 6 ஓவர்களில் 29 ஓட்டங்களைக் கொடுத்து பெற்ற 4 இலக்குகளும் மிகப் பெறுமதியானவை. முன் வரிசை ஆட்டக்காரர்கள் இருவரின் இலக்குகளைக் கைப்பற்றிய இவர் பின்னர் மத்திய வரிசையிலும் மிக முக்கியமான இரண்டு இலக்குகளைக் கைப்பற்றிக் கொண்டார். இந்நிலையில் ஜொனியன்ஸ் அணிக்குப் பெரும் பாதகமாக இவரின் பந்து வீச்சு அமைந்துவிட்டதை அவதானிக்கலாம். பின்வரிசையைப் பொறுத்தவரை அஜந்தன் இரு இலக்குகளைக் கைப்பற்றி ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

களத்தில் நிரம்பியிருந்தது தன்னம்பிக்கையும் இளம்வீரர்கள் உட்பட அனைவரினதும் அர்ப்பணிப்பும் அபாரமான பந்துத் தடுப்பும்தான்- அதற்கான பரிசை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்- வெற்றி என்பதால் அல்ல- சகல தரப்பு ரசிகர்கள் மனதிலும் இடம்பிடித்துக் கொண்டதால்- ஒவ்வொரு வீரனின் திறமையும் அங்கே பளிச்சிட்டது- ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டத்தில் ஒரு ஓட்டம் முடிவை நிர்ணயிக்கும்- ஒரு தவறவிடப்பட்ட பிடி ஆட்டத்தை நிர்ணயிக்கும்- இதற்கெல்லாம் ஜொலிஸ்ரார் இளம் வீரர்கள் சந்தர்ப்பமே கொடுக்கவில்லை-

துடுப்பாட்டத்தில் சிவராஜ் குறிப்பிடப்பட வேண்டியவர். அவரது பாணியொன்றுண்டு ஒரு புறம் அரண் போல நின்றுவிடுவார். சிறுகச் சிறுகச் சேர்த்து அணியைப் பலப்படுத்தி விடுவார் ஆரம்ப ஆட்டக்காரருக்கு அருமையான பாணி. பலரும் பின்பற்ற வேண்டிய பாணி. எதிரணியைச் சலிப்புறச் செய்யும் இவர் ரசிகர்களின் விருப்பத்துக்குரியவர்.

இறுதியாகக் குறிப்பிடுவதாயின் பல பலம் வாய்ந்த அணிகளுக்கு பெரும் சவாலாக விளங்குகிறார்கள்இவ் இளம் வீரர்கள். இவர்களைக் கொண்ட அணியொன்றைத் துணிந்து களத்தில் இறக்கிய பயிற்றுனர், தெரிவுச்சபையினர் கட்டாயம் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

· நிர்மலன்

## சிறிலங்கா வந்துள்ள பலம் வாய்ந்த பாக். அணி

தற்போதைய ஒருநாள் உலகச் சாம்பியன்களான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினர் இரண்டு மாத சுற்றுப்பயணம் ...

... தொடர்ந்து நடைபெறவிருக்கும் 4 நாடுகள் கலந்துகொள்ளும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் கலந்து ...

... ணியின் முகாமையாளராகப் பணிபுரிபவர் இன்டசாப் ஆலம். முன்னைநாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர். பாகிஸ்தான் ...

... பற்றி கிரிக்கெட் ரசிகர்கள் நன்கு அறிந்திருப்பார்கள்.

உதவிக் கப்டன் ஆஸிப்முஜ்தாபா 2-ம் முறையாக இலங்கை வருகின்றார். இவர் இடது கைத்துடுப்பாட்ட வீரர். இடது கைப் பந்து வீச்சாளரும் கூட.

வாசிம் அக்ரம் (27 வயது) மற்றும் வக்கர் யூனுஸ் (22 வயது) பற்றிய அறிமுகம் அவ ...

ஆட்டமிழந்து சென்றார். கிருபாகரன தன் அணிக்காக ஆட்டமிழக்காது 38 ஒட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார் இவ்வகையில் மிகவும் பலம் வாய்ந்த சென்றலைட்ஸ் அணியின் பந்து வீச்சாளர்களை இலகுவாகவேஎதிர்கொ

பாக ஆடியமை இங்கு குறிப்பிடத்தக்கது. சதீஸின் இலக்குச் சரிவு கிராஸ்கொப்பர் அணிக்கு பெரும் நம்பிக்கையைக் கொடுத்தது சதீஸ் வெளியேறும் போது சென்றலைட்ஸ் 130 ஓட்டங்களைப் பெற்றிருந்தன. 21 ஓவர்கள் முடிவ

சென்றலைட்சின் வெற்றி வாய்ப்பென்பது இலகுவானதல்ல என்றவாறு பெரும் அழுத்தம் கொடுத்து ஆடிய கிராஸ்கொப்பர்ஸ் அணியினர் ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்கள் என்பது மட்டும் உண்மை.

இரண்டு மாத சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு சிறிலங்காவிற்குவந்துள்ளார்கள. இவர்கள் 3 டெஸ்ட் போட்டிகள் 3ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள் உட்பட சில பிராந்திய ஆட்டங்களிலும் கலந்து கொள்வார்கள். இதனைவிட

ஒருநாள் சர்வதேச கிரிகெட் போட்டிகளிலும் கலந்து கொள்வார்கள்.

14 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியின் தலைவராக சலீம்மாலிக் (31 வயது) விளங்குகின்றார். உதவித் தலைவராக ஆஸிப்முஜ்தாபா (வயது 26) செயற்பட இவ்வ

ஆலம். முன்னைநாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர். பாகிஸ்தான் அணித் தலைவராக இருந்தவர். சிறிலங்கா பற்றி நன்கறிந்தவர்.

சலீம் மாலிக் நான்காவது முறையாக இலங்கை வருகிறார். மிகத் திறமையான துடுப்பாட்ட வீரர் இவரைப்

வயது) பற்றிய அறிமுகம் அவசியமற்றது. உலகக் கிரிக்கெட் ரசிகர்களின் பெரும் அபிமானத்துக்கு உரியவர்கள் வக்கர் யூனுஸ் இன்று உலகிலேயே அதிவேகப் பந்து வீச்சாளராகக் கருதப்படுபவர்- இம்ரான் கானால் அறிமுகப்படுத்தப் பட்டவர்- ரமீஸ்ராஜா நான்காவது முறையாக இலங்கை வருகிறார்- மிக அழகாக அடித்தாடக் கூடிய வலது கைத் துடுப்பாட்ட வீரர்-

இவர்களை விட அமீர் சொகெய்ல் (29) அக்ரம்றசா (29) இன்சமாம் உல் ஹக் (24) சாஜீட் அன்வர் ஆகியோர் 2-ம் முறையாக இங்குவருகின்றார்கள்- அமீர் சொகெய்ல், சாஜீட் அன்வர்; இன்சமாம் உல் ஹக்கும் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இன்சமாம் உல் ஹக் இறுதி உலகக் கோப்பை கிரிக்கெட் ஆட்டத்தின் மூலம் புகழ்பெற்றவர்-

இவர்களை விட அஸ்ரப் அகமட், பாசிட் அலி (23) முஷ்டாக் அகமட் சாகிட் பாசால் (20) கபீர்கான் (19) ஆகியோர் முதன் முறையாக இலங்கை வருகிறார்கள்- பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளராக வருபவர் றசிட் லத்தீப் (25) சிறிலங்கா வரும் பாகிஸ்தான் அணியில் இம்முறை இம்ரான்கான், ஜாவிட்மியன்டாட், ஆசிப் ஜவாட் போன்ற நன்கறிந்த முகங்கள் இல்லை- ஆனால் உலகின் மிகச்சிறந்த ஆரம்பப் பந்து வீச்சுச்சோடி வாசிம் அக்ரம் வக்கர் யூனுஸ் இருக்கிறார்கள். மேலும் ஒரு சில பளிச்சிடும் இளசுகளில் ஒருவராகக் கருதப்படும் பாசிட்அலி இருக்கின்றார்- பாகிஸ்தான் அணி மிகப் பலமானதொரு அணியாகவே இங்கு வருகின்றது- சிறிலங்கா எவ்வாறு இவர்களை எதிர்கொள்ளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

- நிர்மலன்

---

# கூடைப்பந்து

கழக பெண்கள் அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், B குழுவில் குருநகர் விளையாட்டுக்கழக அணியும் இந்து பெண்கள் கல்லூரி அணியும் அங்கம் வகித்தன. லீக் முறையில் அமைந்த இரு குழுககளுக்குமிடையிலான முதற்சுற்றுப் போட்டிகள் 20-06-94 - 01-07-94 வரை தொடர் தேர்ச்சியாக நடாத்தப்பட்டது. நொக் அவுட் முறையில் அமைந்த அரை இறுதி, இறுதிஆட்டங்கள் மின்னொளியிலமிகச்சிறப்பாக நடந்து முடிந்தது. முதற்சுற்றுப் போட்டியில் A குழுவில் சென்றலைட் சொக்ஸ் அணியும், யாழ் பல்கலைக்கழக 'B' அணியும் அரை இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது. முதலில் பல்கலைக்கழக 'B' அணி பற்றீசியன்ஸ் கிறீன்ஸ் அணியை எதிர்த்தாடியது. இதில் 26;19 என்ற புள்ளிகள் அடிப்படையில் பற்றீசியன்ஸ் கிறீன்ஸ் அணியைத் தோற்கடித்தது. பல்கலைக்கழக 'B' அணி சார்பாக விளையாடிய **Bro. A. C. T.** குரூஸ் 12 புள்ளிகளை தனது அணிக்கு பெற்றுக் கொடுத்திருந்தார். அடுத்து பல்கலைக்கழக 'B' அணி ஜொணியன்ஸ் **Reds** அணியுடன் மோதியது இதில் 31:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜொனியன்ஸ் **Reds** அணியை தோற்கடித்தது. இவ் ஆட்டத்தில் பல்கலைக்கழக B அணித்தலைவர் S.ஜெனிங்ஸ் 16 புள்ளிகளை தனது அணிக்கு பெற்று கொடுத்து வெற்றியை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகித்தார். அடுத்து சென்றலைட்ஸ் சொக்ஸ்க்கும் பல்கலைக்கழக 'B' க்கும் நடைபெற்ற ஆட்டத்தில் செனறலைட்ஸ் சொக்ஸ்அணி 39 25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியீட்டியது. இவ்வாட்டத்தில் சென்றலைட்ஸ் அணிசார்பாக விளையாடிய R. வசந்தகுமார் 13 புள்ளிகளை தமது அணிக்கு பெற்றுக் கொடுத்திருந்தார்.

அடுத்து யாழ்ப்பாண கல்லூரியுடன், பல்கலைக்கழக B அணி மோதி 70 : 21 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணகல்லூரி அணியை தோற்கடித்து வெற்றிவாகை சூடியது. இதில் பல்கலைக்கழக 'B' அணி சார்பில் விளையாடிய S. ஜெனிங்ஸ், **Bro. A.C.T.** குரூஸ்முறையே 20 : 30 என்ற அடிப்படையில் புள்ளிகளை தமது அணிக்கு பெற்றுக் கொடுத்து வெற்றியை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகித்திருந்தனர். இவ்வாறு முதற்சுற்று போட்டியில் 3 போட்டிகளில் வெற்றியீட்டி அரை - இறுதி ஆட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக 'B' அணி தகுதி பெற்றது.

மறுபக்கம் B குழுவில் யாழ். பல்கலைக்கழக 'A' அணியும் பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணியும் அரை இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றிருந்தன. முதலில் பல்கலைக்கழக 'A' அணி, ஜொணியன்ஸ் **Blacks** அணியுடன் மோதியது. எதிர்பார்க்காத கடும் போட்டியை ஜொணியன்ஸ் **Blacks** அணியுடன் பல்கலைக்கழக A அணி சந்திக்க நேரிட்டது. சிறியவர்களானாலும் ஜொணியன்ஸ் **Blacks** அணியினர் மிக தந்திரமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் விளையாடி பல்கலைக்கழக 'A' அணிக்கு கடும் போட்டியை கொடுத்திருந்தனர். இதில் ஜொணியன்ஸ் **Blacks** அணி சார்பில் விளையாடிய C. H ராஜ்குமார், S. காந்தருபன் ஆகியோர் முறையே 16: 13 புள்ளிகளை தமது அணிக்கு பெற்றுக் கொடுத்திருந்தனர். இறுதியில் யாழ். பல்கலைக்கழக 'A' அணித் தலைவர் A. L. யேசுராஜன் உப தலைவர் R. M. J. ரவி ராஜபுத்திரன் ஆகியோர் முறையே 12: 14 என்ற அடிப்படையில் அதிக புள்ளிகளை தமது அணிக்கு பெற்றுக் கொடுத்து 38:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜொணியன்ஸ் **Blacks** அணியை யாழ். பல்கலைக்கழக 'A' அணி தோற்கடித்தது. அடுத்து பல்கலைக்கழக ஊழியர் அணிக்கும் பல்கலைக்கழக A அணிக்கும் நடந்த போட்டியில், பல்கலைக்கழக 'A' அணி 65:28 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வெற்றியீட்டியது.

அதை தொடர்ந்து பற்றீசியன்ஸ் கோல்ட் அணிக்கும், பல்கலைக்கழக 'A' அணிக்கும் நடைபெற்ற போட்டி மிக விறுவிறுப்பானதாக அமைந்திருந்தது வழமைக்கு மாறாக பல்கலைக்கழக A அணிகளும் நெருக்குதலை சந்திக்க நேரிட்டது. இறுதி வரை வெற்றியாருக்குக் கிடைக்கும் என்று நிர்ணயிக்க முடியாத நிலையில் விளையாட்டு அமைந்திருந்தது. கடைசியாக 1 நிமிடம் மட்டும் இருக்கையில் பல்கலைக்கழக A அணி தந்திரமான முறையில் ஒரு **Basket** ஐ போட்டு 23 21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணியை தோற்கடித்தது. இதில் பல்கலைக்கழக 'A' அணி தலைவர் A.L. யேசுராஜன் 8 புள்ளிகளையும் P. ராகுலன் 8 புள்ளிகளையும் தமது அணிக்கு பெற்றுக் கொடுத்து வெற்றியை நிர்ணயிப்பதில் அதிக பங்கெடுத்தனர் அடுத்து பல்கலைக்கழக A அணிக்கும் ஓல்ட் கோல்ட்ஸ் **(Old Golds)** அணிக்கும் இடையில் இடம் பெற்ற போட்டியில் 40:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக A அணி வெற்றியீட்டியது இதில் P. ராகுலன் 14 புள்ளிகளை தமது அணிக்கு பெற்றுக் கொடுத்திருந்தார். இவ்வாறு முதற் சுற்றில் நடைபெற்ற 4 ஆட்டங்களிலும் பல்கலைக்கழக 'A' அணி வெற்றி பெற்று அரை இறுதி ஆட்டத்தில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

மின்னொளியில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டம் பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணிக்கும். சென்றலைட்ஸ் சொக்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. மிக நீண்ட நாட்களின் பின் நடை பெறும்மிக விறுவிறுப்பானதும். கவர்ச்சியானது. மான போட்டி இது வென மத்தியஸ்தர்களாலும். பார்வையாளர்களாலும் இது வர்ணிக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் சென்றலைட் சொக்ஸ் அணி முன்னணியில் திகழ்ந்தபொதிலும் பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணியின் தந்திரமான விளையாட்டாலும் விடாமுயற்சியாலும் விளையாட்டின் இறுதி கட்டத்தில் பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணிமுன்னணிக்கு வந்தது. 47:39 என்ற புள்ளிகள் அடிப்படையில் பற்றீசியன்ஸ் கோல்ஸ் அணி வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்கான தகுதியைப் பெற்றது. பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணிக்கு A. R. A. பெர்னாண்டோ 13 புள்ளிகளையும், விமலதாசன் 14 புள்ளிகளையும், சகாயராஜா 16 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்திருந்தனர். சென்றலைட்ஸ் சொக்ஸ் அணிக்கு G. S. சாந்தீகரன்17புள்ளிகளைபெற்றுக்கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டம் பல்கலைக்கழக A. அணிக்கும் B அணிக்கும்இடையில் நடைபெற்றது. ஒரே குடும்பத்துக்குள் போட்டி நடைபெற்றதால் ஆட்டத்தில் விறுவிறுப்போ, போட்டித்தன்மையோ, உற்சாகமோ காணப்படாத தன்மையை அவதானிக்க முடிந்தது. இறுதியில் 51:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக A. அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடும் தகுதியைப் பெற்றது. இதில் P. ராகுலன் 14 புள்ளிகளையும் S. சுதர்சன் 12 புள்ளிகளையும் பல்கலைக்கழக A. அணிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

கடந்த 08-07-94 அன்று இச்சுற்றுப்போட்டியின்இறுதியாட்டம் பல நூற்றுக்கணக்கானபார்வையாளர்மத்தியில் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட விளையாட்டுத் திடலில் மிக கோலாகலமாகநடைபெற்றது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பல்கலைக்கழக பெண்கள் அணியை எதிர்த்து குருநகர் விளையாட்டுக்கழக பெண்கள் அணி மோதியது. கடும்போட்டிக்கு மத்தியில் நடைபெற்ற இவ்விளையாட்டில் செல்வி T துளசி தலைமையிலான பல்கலைக்கழக பெண்கள் அணி 26:21 என்ற புள்ளியடிப்படையில் வெற்றியீட்டியது. இதில் செல்வி A. கிரிசாந்தி 10 புள்ளிகளையும்அணித்தலைவிசெல்வி .T துளசி 8 புள்ளிகளையும் தமது அணிக்கு பெற்றுக் கொடுத்திருந்தனர். குருநகர் பெண்கள் அணி சார்பில் செல்வி S. நிகிலா 9 புள்ளிகளையும் செல்வி J. றெபிந்தா 6 புள்ளிகளையும் தமது அணிக்கு பெற்றுக்கொடுத்திருந்த

( 7ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# தேர்தல் வன்முறையில் இதுவரை ஐவர் பலியாகினர்

## 625 வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)

தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இதுவரை அறுநூற்றி இருபத்தைந்து வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக, தேர்தல் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் டி. நிக்ஸன் தெரிவித்துள்ளார்.

இவ்வன்முறைச் சம்பவங்களின்போது ஐந்து பேர் கொலை செய்யப்பட்டதாகவும், இதில் இரண்டு கொலைகள் பொலனறுவை மாவட்டத்தில் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி, களுத்துறை, சிலாபம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு கொலை, வன்முறைச் சம்பவங்களின்போது செய்யப்பட்டதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## 3-ம் ஆண்டு நிறைவு நினைவஞ்சலி



### கப்டன் சிவம்/பவான்

(திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன்)

| பூவுலகத்தில் | வீரசொர்க்கத்தில் |
|---|---|
| 1972- 06- 03 | 1991- 07- 27 |

ஆனையிறவுக் கடலேரிதனில்
மாவேங் கையாக வரலா றுதந்தே
தமிழீ ழமது தாரக மாக
வமிச முளபுகழ் மன்னுவ தாகப்
பார காவியம் படைத்தே
வீரசொர்க் கத்து விருந்தாகினையோ!

நெல்லைநாதன் வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

- குடும்பத்தினர்.

(8934)

## 6-ம்ஆண்டுநினைவலைகள்



## கரப்பந்தாட்டம்

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக்கழக இரண்டாமாண்டு நிறைவு விழாவை ஒட்டிய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டம் இன்று புதன் இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறும்.

ஐங்கரன் வி. க. அணியை எதிர்த்து சிறிவிக்னேஸ்வரா வி. க அணியும் ஆவரங்கால் மா. வி. க. அணியை எதிர்த்து அரியாலை ஐ. வி. க. அணியும் மோதுகின்றன. இறுதியாட்டம் நாளை வியாழன் நடைபெறும் அன்று காட்சி கரப்பந்தாட்டமாக யாழ் மத்திய கல்லூரி எதிர் யாழ் கனகரட்னம் ம. ம. வி. மோதும்.

## உற்பத்திகுழு கூட்டம்

(தொல்புரம்)

தொல் ரம் மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச்சார்ந்த பயிர்ச் செய்கையாளர்களின் உற்பத்திக்குழுவின் பொதுக்கூட்டம் இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

## வைத்தியஊழியர் வேலை நிறுத்தம்

(மன்னார்)

மன்னார் ஆதாரவைத்திய சாலையைச் சேர்ந்த சிற்றூழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் அரை மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தனர்.

கடந்த இரண்டு மாதங்களாக தங்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டவே அவர்கள் இந்நடவடிக்கையை மேற்கொண்டனராம்.

## கிளிநொச்சியில் பயிற்சிப்பட்டறை

தமிழீழத்தின் வளங்களை இனங்கண்டு அதன் அபிவிருத்தியை மேற்கொள்ளும் முகமாக பாரிய பயிற்சிப்பட்டறை ஒன்றை அண்மையில் தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தினர் கிளிநொச்சியில் நடாத்தினர்.

யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் நடாத்தப்பட்ட இப் பயிற்சிப் பட்டறையில் இதுவரையில் எந்த ஒரு அரச நிறுவனமும் மேற்கொள்ளாத பாரிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டதோடு அவசியமான திட்டங்களை இனங்காணல் அவற்றை திட்ட அறிக்கைகளாக்குதல் என்பவற்றிற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி விவசாயபீ

# 16 தொழிலாளர்களை 3 தினங்களாககாணவில்லை

## சுவரொட்டி ஒட்டினார்களாம்

(கொழும்பு)

பியகம தொழிற்சாலையின் சில நடவடிக்கைகளுக்கு எதிராக சுவரொட்டி ஒட்டிய பதினாறு தொழிலாளர்கள் தொடர்பாக தகவல் எதுவும் மூன்று நாட்களாக கிடைக்கவில்லை என சகல தொழிலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் இயங்கும் நிறுவனமொன்றின் நிர்வாக அமைப்புக்கு எதிராக கிரிபத்கொட பகுதியில் மேற்படி தொழிலாளர் சுவரொட்டிகளை ஒட்டியதாகவும் அப்போது ஒரு வாகனத்தில் வந்த சீருடை இல்லாதவர்களினால் இவர்கள் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டதாகவும் இதன் பின்னர் இவர்களுக்கு என்ன நடந்தது என தெரியாமல் இருப்பதாகவும் அத்தொழிலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்,

## 3 ம்ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கேணல் சரா


சின்னத்துரை ஜீவராசா

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 19- 4- 1962 | 27- 7- 1991 |

நீங்காத நினைவுகளுடன்

கல்வியங்காடு. (8944) தம்பி மானா

## 3-ம் ஆண்டு நினைவு நிழலில்....



### லெப். கேணல் சரா

[சின்னத்துரை ஜீவராசா]

பிறப்பு: 19-04-1962 வீரச்சாவு: 27-07-1991

ஆனையிறவில் அரக்கர்தம் சாக்காட்டில்
தானைத் தலைவன் சராவை நாமிழந்து
ஆண்டு மூன்று கழிந்தாலும்
அன்புருவை நாம் மறவோம்.
என்றும் எங்கள் -
இதயம் நிறைந்த சிவத்திற்கு
கண்ணீர் நினைவுகள்.

(இன்றைய தினம் நடைபெறவிருக்கும் மதிய போசனத்தில் சராவின் நண்பர்களையும், சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்)

டச்சு வீதி,
கல்வியங்காடு.

சரா குடும்பத்தினர் (கனடா)
பெரியமமா (கல்வியங்காடு)

(8940)

## நீங்காத நினைவில் ஆண்டு மூன்று



## 6-ம் ஆண்டு நினைவலைகள்



### லெப். ராஜு
### (சிவஞானசுந்தரம் ஐங்கரன்)

| தாய் மடியில்: | தமிழீழ மண்ணின் மடியில்: |
|---|---|
| 29 - 05 - 1968 | 27 - 07 - 1988 |

தமிழீழ இளம் நாற்றுக்களின் இருப்பழிக்கவந்த
இந்தியக் கறையானை அழித்த வேங்கையே! ஐங்கரா, நீ
மாவீரர் அணியிலே ஒருமணியானாய் உயிர்மணியால்
தமிழீழ எல்லை உருவாக்கும் உன் அணியில்
தொடர்கிறார் உன்தோழர்
உன் நினைவில் உன்சுற்றம் எடுக்கும் உறுதி இது.

'' ஞானகிரி ''
ஐங்கரன் வீதி,
அளவெட்டி.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(8924)

களை இனங்காணல் அவற்றை திட்ட அறிக்கைகளாக்குதல் என்பவற்றிற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி விவசாயபீட விரிவுரையாளர்களான திரு எதிர் வீரசிங்கம், திரு எஸ். இராஜதுரை மற்றும் துறைசார் நிபுணர்கள் பங்குபற்றிய இப்பயிற்சிப் பட்டறையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய திட்டங்கள் மூலம் தமிழீழ தற்சார்புப் பொருண்மியக் கட்டமைப்பை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வயல்விழா

ஆராய்ச்சி நிலைய செயற்பாடுகளை வெளிக்கொணரும் முகமாக கடந்த 19-ம் திகதி திருநெல்வேலியில் வயல் விழா ஒன்று நடாத்தப்பட்டது.

ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன்னுத்துரை அவர்களது தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அரச அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் பெருமளவான விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆய்வு செய்யப்படும் வத்தகை, சூரியகாந்தி, ஆமணக்கு ஆகியவற்றின் இருபதிற்கு மேற்பட்ட பயிர்மாதிரி துண்டங்கள் விவசாயிகளிற்கு காட்டப்பட்டு விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற இவ்விழா கூட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் உதவி விவசாயப்பணிப்பாளர், திரு சிவலோகநாதன் மருதனார் மடம், விவசாய கல்லூரி அதிபர் திரு. குகதாசன், விவசாய சம்மேளன பிரதிநிதி திரு குமாரசாமி, விவசாய உதவிபணிப்பாளர் திரு சின்னத்துரை உற்பத்திக்குழுதலைவர் திரு முதலியார் உட்பட மற்றும்பலர்உரையாற்றினர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் வினோத்
### (கனகராசா பிரபாகரன்)

| தாயின் மடியில் | தாயகமண்ணில் |
|---|---|
| 02-07-1971 | 27-07-1991 |

உந்தன் நினைவுகள்
மனதை சுட்டாலும்,
குளிர்மையாய் தடுப்பது
உந்தன் தியாகம் தான்.
உன் உணர்வுகள்
உலகத்தின் சுவர்களை
உரசக் கூடியது என்பதை
நாம் உணர்கிறோம்
உன் அர்ப்பணிப்பு
உன்னதமானது!

கீதன் வீதி,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

உந்தன் நினைவுடன் எந்த நாளும்
அப்பா, அம்மா, அக்கா,
தம்பிமார்.

(8893)



### லெப். உமாசங்கர் - ரவி
### (சின்னமணி கன்சியஸ்)

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 27-08-1973 | 27-07-1991 |

ஆனையிறவில் சமர்க்களமாடி காவியமானாய்
தலைவன் வழியில் வீரமுடன் வீறுநடை போட்டாய்
குருநகரின் வீரமதை எடுத்துக்காட்டி நின்றாய்
சருகென எதிரியை சாக்களம் போக்கி வென்றாய்
வரும்நாளில் தமிழீழம் மலரப்போகும் காட்சியை
உன்தோளொடுதோளாய் நின்று ஈழத்துக்கு
போராடிய
மாவீரர் ,கரும்புலிகள் சகிதம் சொர்க்கத்தில் நின்று
நீ காணும் வேளையில் சுதந்திர காற்றை சுகிப்போம்

உங்கள் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

8/3 லெப். உமாசங்கர் வீதி,
(மத்திய கிழக்கு வீதி,)
குருநகர்
யாழ்ப்பாணம்.

(சி-9982)

## 3 ஆம் ஆண்டு நினைவாக



**2-ம் லெப். சுந்தரி (தர்சனா)**
(சுஜிதா தேவநாயகம)
திருகோணமலை

| | |
|---|---|
| திருமலையில்: | ஆனையிறவில்: |
| 23-12-1973 | 27-07-1991 |

ஒவ்வொருவரின் சாவும்
அர்த்தத்துடன் சரித்திரம் கூறும்
சாவாக அமைய வேண்டும்
அப்படி அமையும் போது-அந்த நிகழ்வானது
இதயத்தில் ஒரு ஆழமான..
கடந்த கால நினைவுகளின் தேடலை
உருவாக்கி விடுகின்றது-அந்தவகையில்
உன் போன்றவர்களின் வீரச்சாவு
என்னில் புதிய மூச்சாய்!

நினைவு கூரும்......
(8899) அண்ணன் சுபாசெழியன்

## 3 ஆம் ஆண்டு நினைவாக



## 3 ஆம் ஆண்டு நினைவாக



**லெப். பிரசன்னா**
(நிமலேந்திரன்)
(தங்கவேல் செந்தில்குமரன்)

| | |
|---|---|
| பிறப்பு | வீரச்சாவு |
| 21-09-1974 | 27-07-1991 |

பாசமிகு தண் நிலவே -- பசும்
சோலைவன இளம் குயிலே
வாசமிடும் நறுமலரே - வாழ்வின்
நாதமென வந்த நிமலேந்திரனே
ஆசைகொண்டும் அனைவர் மனம்
அரவணைத்த எங்கள் தலைமகனே
தேசம் ஒன்றும் நினைவிலிட
தேடி நீ சென்றனையோ-
வீர சுவர்க்கம்.

ஐயா, அம்மா, அக்கா,
தம்பி குமரன், தங்கை பிரியா,
நடராஜா வீதி,
வல்வெட்டித்துறை.
(8841)

## 3 ஆம் ஆண்டு நினைவாக

காலச் சுவரில் ஓவியமாய் - என்றும்
கரையா நினைவிற் காவியமாய்......

### கள்ள நோட்டு கண்டுபிடிப்பு

(அத்துருகிரிய)

குடபுத்கமுவையிலுள்ள கொகிலவத்தையிலுள்ள வீடொன்றிலிருந்து பெருந்தொகையான கள்ள கரன்சி நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து சி ஐ டி பொலிஸார் அத்துருகிரியாவிலுள்ள வீடமைப்புத்திட்டத்திலிருக்கும் வீடொன்றின் தோட்டத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த மற்றொரு தொகுதி கள்ள கரன்சி நோட்டுகளைக் கைப்பற்றினர். இங்கிருந்து 1,96,500 ரூபா பெறுமதியானவை கைப்பற்றப்பட்டுள்ளன.

### முதன்மைஆசிரிய கூட்டம்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1ஐ சேர்ந்த முதன்மை- ஆசிரியருக்கான விசேட கூட்டம் வியாழன் காலை 9.00 மணிக்கு கல்வித்திணைக்களத்தில் நடைபெறும்.

### அனுமதி அட்டை உடன்பெறுக

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் நடைபெறவுள்ள க பொ. த. உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றும் யாழ். மாவட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலரின் அனுமதி அட்டைகள் தபாலகத்தில் இருந்து யாழ். கல்வித் திணைக்களத்திற்கு திரும்பி வந்துள்ளன.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் கல்வித்திணைக்களத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

### பாலர் கல்வி பயிற்சிநெறி

(பருத்தித்துறை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், போறாட் நிறுவனம் ஆகியன இணைந்து கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் வன்னிமாவட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான இருவாரகால பாலர்கல்விபயிற்சிநெறியொன்றை நடாத்தியது. இப் பாலர் கல்வி பயிற்சிநெறியில்தெரிவுசெய்யப்பட்ட 35 பாலர் பாடசாலை ஆசிரியர்கள் பங்கு பற்றினர். இப் பயிற்சி நெறியில் வடமராட்சி ஆரம்பஆசிரியர் குழு பயிற்சிகளை வழங்கியது. இப்பயிற்சி நெறிகளின் போது பாலர் பாடசாலை ஆசிரியர்கள் சித்திரம், அழகியல், பொம்மலாட்டம், உளவியல், உடல் நலக்

## 3 ஆம் ஆண்டு நினைவாக



மண்ணில்:
28 - 05 - 1968

மனங்களில்:
27 - 07 - 1991

**2-ம் லெப். அல்பேட் - பாபு**
(நடராசா கலைச்செல்வன்)
தையிட்டி, காங்கேசன்துறை

கல்வி கற்கும் வேளையிலே - மண்ணின்
மானம் காத்திடவே விரைந்திட்டாய் நீயும்
இலட்சியத்தின் பாதையிலே - மாவீரன்
என்னும் போர்வையிலே திகழ்கின்றாய் இன்று

(8900) - குடும்பத்தினர்

ஆனையிறவு சமர்

## மூன்றாண்டு நினைவில்..



**2-ம் லெப். கந்தன்**
(டானியல் ராஜ்குமார் - சக்கோட்டை)

| | |
|---|---|
| பிறப்பு: | வீரச்சாவு: |
| 13-07-1974 | 27-07-1991 |

இவரையும் இவருடன் ஆனையிறவுச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட சக வேங்கைகளையும்

தரம், அழகியல், [illegible]
ட்டம், உளவியல், உடல் நலக்
கல்வி போன்ற துறைகளில்
விரிவுரைகளும் செயலமர்வு
களும் இடம்பெற்றன. இப்
பயிற்சிகளைப் பெற்றுக்கொ
ண்ட ஆசிரியர்களுக்குச் சான்
றிதழ்களும் வழங்கப்பட்டன.
(25)

இவரையும் இவருடன் ஆனையிறவுச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட சகவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சக்கோட்டை,
அல்வாய் வடக்கு
(8916)

பெற்றோர், சகோதரர்,
குடும்பத்தார்.




மேஜர் குகதாஸ்
[இராசரத்தினம் (இராஜேந்திரன்)]

தாயின் மடியில்: 26 - 09 - 1964
ஆனையிறவு சமரில்: 27 - 07 -1991

எம் மண்ணுக்காய் உதித்த இந்திரனே - நீ
உதிர்ந்து மூன்றாண்டு போனாலும்
ஆறாது உன் நினைவு - நீ
களத்தில் பல ஆடி
தாயகக் கனவுடன் ஆனையிறவில்
சாவினைத் தழுவினாயோ!
இதனால் உன் பாதை தெளிவானது
பயணம் உன்னதமானது
உனது இலட்சியத்தால் - நாம்
அமைதியடைகிறோம்!
மலர்ந்து விடு மீண்டும் இந்திரனே
தமிழீழம் காண்பதற்கு!

குகதாஸ் வீதி,
உரும்பிராய் - வடக்கு.

- குடும்பத்தினர்
(8904)



மேஜர் சொனி
(சிவஞானசுந்தரம் அசோகன்)

பிறப்பு: 28-11-1967
வீரச்சாவு: 27-07.1991

வாழப் பிறந்தவர் சாவதுவும்
சாகப் பிறந்தவர் வாழ்வதுவும்
ஈனக் கொடியவர் சிரிப்பதுவும்
இங்கிதம் தெரிந்தவர் அழுவதுவும்
மான முள்ளவர் மடிவதுவும்
மானங் கெட்டவர் பெருகுவதும்
ஞானிகள் வெறுத்த மண்ணின் மேல்
ஞாய மிருப்பது தெரியவில்லை!

— மணிவண்ணன் —

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
(8918)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி





வீரவேங்கைடட்லியா(தேவசிகாமணிவரலெட்சுமி)

27-07-1991 அன்று ஆனையிறவில் நடைபெற்ற நேரடிமோதலில் வீரச்சாவடைந்தார்.

மலர்வு: 22 - 02 - 1971
வீரச்சாவு: 27 - 07 - 1991

திதி: 23 - 07 - 1994

ஆழ்கடலின் அலைகள்தாம் ஆர்ப்பரித்து எழுந்தனவே!
அன்புமனதின் நினைவலைகள் நிதம் நம்மை வாட்டுகின்றனவே!
தென்னகத்தின் அலைகள்கூட எம்தாய் நாட்டின்
விடுதலை கீதம் இசைக்கின்றன எம்மனதில்
நீ வித்திட்ட உணர்வுகள் நாம் விருட்சமாய் வளர்ந்தனவோ?
விடுதலைப்பாதையில் சுடரொளியாய் நிற்பவளே டட்லியா!!
நின்பாசத்தை நினைத்திங்கே பதறுகிறோம் யாம்.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ரூபவாசம்,
சடையாண்டி கோவில் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
(8862)

உன் பிரிவால் வாடும்
அம்மா, அண்ணா, சகோதரிமார், அத்தான்மார்,
அண்ணி, பெறாமக்கள், மருமகன்.

## சிந்தனைக்கு..

இரவில் எழும் பயங்கரத்திற்கோ பகலில் பாயும் அம்புகளிற்கோ அஞ்சவேண்டியதில்லை

- தாவீதுமன்னன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 27-07-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05


## தவிர்க்க முடியாது கூறவேண்டியுள்ளது

உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் என்பனவற்றை சிறிலங்கா அரசாங்கம் மீறுவதும் கிழித்தெறிவதும் புதியதொரு நிகழ்வல்ல. இது சிறிலங்காவின் அரசியல் வரலாற்றுடன் இணைந்தது. இந்த வகையிலேயே யாழ். போதனா வைத்தியசாலை மீதும், அதனோடு இணைந்த பாதுகாப்பு வலயம் மீதும் சிறிலங்கா இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதல் குறித்தும் கொள்ளவேண்டியுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை மீதும், அதனுடன் இணைந்த பாதுகாப்பு வலயத்தினுள்ளும் தாக்குதல்கள் எவையும் நடத்தப்படமாட்டாது என சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் உடன்பாடு கண்டிருப்பினும், இது பல தடவை மீறப்படும் ஒன்றாகவே உள்ளது. இந்த வரிசையில் இறுதியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ். போதனா வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் உள்ளது.

இத் தாக்குதலின் போது, அதிர்ஷ்டவசமாக எறிகணை வெடிக்காததினால், பெரும் உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் தவிர்க்கப்பட்டது. அவ்வாறு இல்லாது எறிகணை வெடித்திருப்பின் பெரும் உயிர் இழப்பும் தவிர்க்க முடியாது ஏற்பட்டே இருக்கும். ஆனால், இவ்விவகாரத்தில் முக்கியமானது எறிகணை வெடித்ததா? பாரிய சேதங்கள் ஏற்பட்டதா? என்பதல்ல யாழ். போதனா வைத்தியசாலை மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதும், சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டை மீறியுள்ளது என்பதுமே ஆகும்.

இத்தாக்குதல்கள் குறித்து திரும்பத் திரும்பக் கூறுவதினால் சிறிலங்கா அரசாங்கம் திருந்தி விடும் என்று எதிர்பார்க்க முடியாது விட்டாலும், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எழுத வேண்டியும், கூறவேண்

# ஏற்கனவே நாடு இரண்டாக பிளவுபட்டு விட்டது

### அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னான்டோ தெரிவிப்பு

இன்று பலர் யாழ்ப்பாணம் செல்லமுடியாது என்பது உண்மை. இது ஏற்கனவே நாடு இரண்டாக பிளவுபட்டு விட்டது என்பதைக் காட்டுகிறது என அங்கிலிக்கன்ஆயர் அதி. வண கெனத் பெர்னான்டோ சண்டே லீடர் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அமைதிக்காக செயற்படுவதன் அவசியம் குறித்து நாம் அனைவருக்கும்கூறியுள்ளேன். நாம் எப்போதும் அன்பையும் அமைதியையும் பேணும்படி சகலரையும் கேட்கின்றேன். யாழ்ப்பாண மக்கள்தேர்தலில் பங்கு கொள்ள முடியவில்லை. அவர்களை பங்கேற்கச்செய்ய எம்மால்முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தும் நோக்கம் அரசிற்கு உண்டு ஆனால் முடியவில்லை. நாட்டின் ஒரு பகுதியில் தேர்தல் நடத்தும் தகுதியை அரசு இழந்து விட்டது என அவர் அதில் குறிப்பிட்டார்.

# இனப்பிரச்சினை தீர்வில் இரு கட்சிகளுக்கும் அக்கறையில்லை

### 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை சாடல்

(கொழும்பு)

ஐ. தே. கவும் சுதந்திரக் கட்சியும் இன்று நாட்டை கலக்கும் அதி முக்கிய பிரச்சினையிலிருந்து நழுவி அற்ப விடயங்கள்குறித்து பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை சுமத்தும் போக்கு நாட்டிற்கு பாரிய கேட்டை விளைவிக்கும் என 'சண்டே ஐலண்ட்' ஆசிரிய தலையங்கம் கருத்துவெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; நாட்டின் இருஇனங்களையும் சீரழிக்கும் பிரச்சினைக்கு பல பெயர்கள் கொடுக்கப்படுகிறது. இந்நாட்டின் பாராளுமன்றம் என்று சிங்கள சபையாக மாறியதோ அன்றிலிருந்து இந் நாட்டின் சரித்திரம் கறைபடிந்ததாகி விட்டது. நாட்டை சீரழிக்கும் இந்த இனப்பிரச்சினை தொடர்பாக தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் எதை கூறப்போகின்றன? 1987இல் தோற்றுவிக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு அமைய பேச்சு வார்த்தை மூலம் அல்லது இராணுவத்தீர்வு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என ஐ. தே. க. கூறியுள்ளது. பொருளாதார சமூக ரீதியில் பிரதேசநிர்வாக அமைப்புகளை உருவாக்கி அவற்றிற்கு பூரண அதிகாரங்கள் வழங்கப்படும் என பொது ஜன ஐக்கிய முன்னணி கூறுகின்றது.

வடக்கு - கிழக்கு பகுதியில் பூரண அதிகாரம் கொண்ட நிர்வாக அமைப்பு உருவாக்குவதே தமது இலட்சியம் என கொழும்பு வாழ் தமிழ்க் குழுவின் சார்பில் போட்டியிடும் குமார் பொன்னம்பலம் கூறுகிறார். 1987 இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை எதிர்க்கும் டி. பி. விஜேதுங்கா தலைமையிலான ஐ. தே. கவினர், எவ்வாறு இந்த ஒப்பந்த அடிப்படையில் பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியும்? பொது ஜன ஐக்கிய முன்னணி அதிகார பரவலாக்கம் பற்றி பேசி வருகிறது. இந்த அதிகார பரவலாக்கலின் தன்மை என்ன? வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பே இனப்பிரச்சினையில் ஆணி வேராகும். பொதுஜன ஐக்கிய முன்னணியின் இந்த இணைப்புக் குறித்தஅறிவிப்பிற்கு ஐ. தே. கவும், மக்கள் விடுதலை முன்னணியும் கடும் ஆட்சேபம் தெரிவித்து வருகின்றன. சந்தர்ப்பவாத அரசியலினால் நாட்டில் இரத்தம் ஓடுகின்றது என சண்டே ஐலண்ட் சுட்டிக் காட்டியுள்ளது.

# ஐ. தே. கவை பலப்படுத்தின் வடக்கின் பிரச்சினை தீரும்

### பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி விஜேதுங்கா

(கொழும்பு

1977ஆம் ஆண்டு ஐ. தே.க. ஆட்சி பொறுப்பை ஏற்ற போது திறைசேரியில் அந்நிய செலாவணியாக ஒரு வாரத்திற்கு போதுமான பணமே இருந்தது. இது அநுராவிற்கும் தெரியும். இவ்வாறு மொனராகலையில் நடைபெற்ற ஐ. தே. க பிரசார கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்தார்.

வடக்கில் பிரச்சினை இன்னமும் உள்ளது. கிழக்கில் அது இல்லை வடக்கு மட்டுமே இன்று எஞ்சியுள்ளது. ஐ. தே. கவை பலப்படுத்தினால் இதற்கும் தீர்வு கண்டு விடலாம். பொதுஜன ஐக்கிய முன்னணி தனது பிரசார கூட்டங்களில் வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து பேசுவதில்லை. இவர்கள் பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்துள்

ஐரோப்பிய பிரதிநிதிகளிடம்

# இனப்பிரச்சினை குறித்து அமைச்சர் ஹமீட் விளக்கம்

# மாணவர் மீது மோதிய வான் தீக்கிரையானது

### பேராதனையில் சம்பவம்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக பொறியியல்பீட தமிழ் மாணவர் மூவர் மீது ஹையஸ் வான் ஒன்று மோதியதால் அவர்கள் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளானதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த புதனன்று நடைபெற்றது. விபத்தையடுத்து வானின் சாரதி வானைவிட்டு ஓடிவிட்டார். வானை சூழ்ந்து கொண்ட சக மாணவர்கள் அதற்கு தீ வைத்தனர்.

## உடுவில்

நேரத்தில் முன்னணி வகிக்கலாயிற்று- ஆட்ட முடிவுநேரம் நெருங்க நெருங்க மெதடிஸ் அணியின் கோல் போடும் வேகமும் அதிகரிக்க முடிவு எவ்வாறு அமையும் என்பது பற்றி இரசிகர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது எனினும் உடுவில் மகளிர் அணியின் தற்காப்பு ஆட்டமும் அது முன் அரை நேரத்தில் பெற்றிருந்த மேலதிக கோல்களும் அதனைதோல்வியில் இருந்து காப்பாற்றிவெற்றிப் பாதையில் இட்டுச் சென்றதெனலாம் பரபரப்பான இறுதியாட்டம் முடிவுக்கு வந்தபோது பின் அரை நேரத்தில் மெதடிஸ் அணி 12-09 என்ற நிலையில் முன்னணி வகித்ததாயினும் மொத்தத்தில் 20-16 என்றகோல் கணக்கில் உடுவில் மகளிர் அணி சம்பியனாகியது.

கடந்த வருடம் மெதடிஸ் அணியிடம் இழந்த சம்பியன் பட்டத்தை மீண்டும் இவ்வாண்டு உடுவில்மகளிர் அணி கைப்பற்றிக் கொண்டது. அதன் வலைப்பந்தாட்டத் தரத்தை எடுத்துக் காட்டுவதாகும். எனினும் மெதடிஸ் அணி மீண்டும் இவ்வாண்டும் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டதும் போட்டியில் இறுதிவரை சிறப்பாக ஆடியதும் மெதடிஸ் அணியும் வலைப்பந்தாட்டத்தில் தான் ஆற்றலை மீண்டும் நிரூபித்துள்ளதெனலாம்.

மொத்தத்தில் இவ்வாண்டு யாழ் மாவட்ட பாடசாலைகள் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் தலா நூறு அணிகள் பங்கு கொண்டதும் அவை பல மட்டங்களில் சிறப்பாக நடாத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாண்டு வழமைபோல் மெதடிஸ் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் தமது ஆட்டத்திறமைகளை நிரூபித்து இறுதிப் போட்டிகளில் கலந்து கொண்ட அதேவேளை புதிய ஓர் அணியாக உருவெடுத்து இறுதிப்போட்டியில் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய அணி பலரின் பாராட்டுதல்களையும் அதே வேளை பலருக்கு வியப்பையும் ஏற்படுத்தியதெனலாம்.

## வெற்றிக்

அன்றிருந்த நிலைமை வேறு இன்றுள்ள நிலைவேறு இன்று ஒரு சுற்றுப் போட்டிக்கு 25000ரூபா வரையில்செலவாகிறது. இது தனியார் கல்லூரி முற்று முழுதாக இவ்வளவு செலவையும் நாமே ஏற்றுக் கொண்டுள்ளோம் ஆசிரியர்கள் பங்களிப்பும் மறக்கமுடியாதது'' என்கிறார்.

பயிற்றுனர் மீளவும் கருத்துக் கூறும் போது என் அதிபர், என் பயிற்றுநர். இதனால் ஒவ்வொரு ஆட்டத்தின் பின்னும் நாம் அனைவரும் கூடி மீள் பரிசீலனை செய்வது வழக்கம் இது ஆட்டத்தை இன்னும் மெருகேற்றுகின்றது. ஒவ்வொருநாளும் பயிற்சியின் போது அதிபர் மைதானத்திற்குச் சமுகமளிக்கத் தவறுவதேயில்லை. எமது வலைப்பந்தாட்டவெற்றி என்பது இலகுவில் வந்து விடவில்லை பல் வேறு அம்சங்களின் ஒன்றிணைப்புத் தான் இது என்று முடிக்கிறார்.

இறுதியாக விடைபெறும் போது உங்கள் அணியின் தர்மிலாவும், அங்கவையும் மிகச் சிறந்த வீராங்கனைகளாக ரசிகர்களினால் இனம்காணப்பட்டுள்ளார்கள் ஆட்டத்தின் போது சமநிலை குலையாமல் விளையாடும் தன்மை அங்கவையிடம் கூடுதலாகக் காணப்படுகின்றது என்ற அபிப்பிராயமும் இருக்கிறதேஎன்று கூறிய போது சகலரும் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

ஒரு உற்சாகமான கலந்துரையாடலின் பின் நன்றி கூறி விடை பெற்றோம்.

## கூடைப்பந்தாட்டம்

னர்.

அடுத்து ஆண்களுக்கான இறுதியாட்டம் A. L. யேசு

னத்தால் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியுடன் மோதி 2-ம் இட

இத்தாக்குதல்கள் குறித்து திரும்பத் திரும்பக் கூறுவதினால் சிறிலங்கா அரசாங்கம் திருந்தி விடும் என்று எதிர்பார்க்க முடியாது விட்டாலும், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எழுத வேண்டியும், கூறவேண்டியும் உள்ளமை தவிர்க்க முடியாததே ஆகும்.

ஏனெனில், சிறிலங்கா அரசாஙகம் மேற்கொள்ளும் பிரசார நடவடிக்ஂகைகளின்போது இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை என்பது மட்டுமல்ல, சர்வதேச ரீதியாக வரையறை செய்யப்பட்டுள்ள மனித உரிமைகளையும் தாம் கடைப்பிடித்து வருவதாகவும் பிரசாரம் செய்து வருகின்றது. இவை சில சமயங்களில் வெளியுலகில் ஏற்றுக் கொள்ளப்படுபவையாகவும், சில சமயம், கண்டும் காணாமலும் விடப்படுபவையாகவும், உள்ளன.

இந்த வகையில், சிறிலங்கா அரசாங்கத்திற்கு உதவி வழங்கும் நாடுகளின் நிலைப்பாட்டையே சுட்டிக் காட்டமுடியும். பல மனித உரிமை ஸ்தாபனங்களும் மனித நேய ஸ்தாபனங்களும் இங்குள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இனப் படுகொலை தொடர்பாகவும் அவை வழங்கும் அறிக்கைகள் பெயரளவிலேயே கருத்தில் எடுக்கப்படுவதாகத் தெரிகின்றது. அவ்வாறு இல்லாது விட்டால், இலங்கையில் நெருக்கடியும், இரத்தக்களரியும் அதிகரித்த போதும், உதவியில் துண்டோ / வெட்டோ ஏற்படவில்லை என்பதே உண்மையாகும்,

இந் நிலையிலேயே சிறிலங்கா அரசாங்கத்தின் இந் நடவடிக்கைகள் பற்றி தொடர்ந்து கூறப்படவேண்டிய தேவையும், எழுதப்பட வேண்டிய தேவையும் உள்ளது. இதன் மூலம், சிறிலங்கா அரசாங்கத்தின் உண்மைச் சொரூபம் வெளிவருவதுடன் அதனுடன் செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் என்பன எவ்வளவு அர்த்தமற்றவை என்பதையும் உலகம் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், இது வரலாற்றை விளங்கிக் கொள்ளாதவர்களுக்கு மட்டுமே உதவக்கூடும். சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கையையும் அதன் கடந்த காலத்தின் வரலாற்றையும் புரிந்து கொண்டவர்களையும் இது பாதிக்க மாட்டாது. இது தூக்கத்தில் இருப்பவனை எழுப்புவது போன்றதல்ல. தூங்குவது போல் பாசாங்கு செய்பவனை எழுப்புவது போன்றதாகும். இது சாத்தியமாகாத விடயமாகும். ஆயினும் திரும்பத் திரும்ப குறிப்பிடுவதன் மூலம்ஒவ்வொரு முறையும் ஒரு சிலராவது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களையும் துயரங்களையும் புரிந்துகொண்டால் போதுமானதாகும்.

# இனப்பிரச்சினை குறித்து அமைச்சர் ஹமீட் விளக்கம்

ஐரோப்பிய யூனியனுடன் அபிவிருத்தி ஒப்பந்தம்ஒன்றில் கைச்சாத்திட பிரசல்ஸ்சென்ற வெளியுறவு அமைச்சர் ஹமீட்டிடம் யூனியனில் அங்கம் வகிக்கும் ஐரோப்பியநாடுகளின் பிரதிநிதிகள் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து பேச்சுகள் நடத்தினர்.

ஜேர்மனி, இங்கிலாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின், நெதர்லாந்து, கிறீஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுஅமைச்சர்களை ஹமீட் சந்தித்து பேச்சு நடத்திய வேளை வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து அமைச்சர் விளக்கமளித்து அரசியல் தீர்வுக்கு முயற்சி தொடர்வதாக குறிப்பிட்டார்.

# பற்றரியுடன் சென்ற தம்பதி வெயிலில் நிறுத்திவைப்பு

## மன்னாரில் படையினரின் நடவடிக்கை

(மன்னார்)

இராணுவம் தங்கியுள்ள பகுதிகளில் கூட பற்றரிகள் எடுத்துச் செல்ல படையினர் தடைவிதிப்பதாக மன்னாரிலிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் வங்காலையிலிருந்து மன்னார் சென்ற பஸ்ஸில் பயணம் செய்த இளம் தம்பதிகள் தம்முடன் வானொலி ஒன்றை எடுத்துச் சென்றனர். இதில் பற்றரி இருந்த காரணத்தினால் பஸ்ஸை சோதனையிட்ட இராணுவத்தினர் அவர்களை தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கவில்லை. வெயிலில் கால் கடுக்க இவர்கள் சிறிது நேரம் நிறுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# படப்பிடிப்பு வினையானது 500 பேருக்கு வாள்வெட்டு

(வாஷிங்டன்)

ஹொலிவூட் படப்பிடிப்பின் போது ஒரு போர் காட்சியில் படப்பிடிப்பு என்பதையும் மறந்து இருதரப்புகள் வாள்கள், கத்திகள் கோடரிகள் கொண்டு போரிட்டதால் 500 இராணுவ ரிசேர்வ் படையினர் வெட்டு காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளையர் - செவ்விந்தியர் மோதலை படப்பிடிப்பு செய்த போதே இரு தரப்பினரும் தம்மை மறந்து உண்மையிலேயே மோதலில் இறங்கிவிட்டதால் நிலைமை மோசமடைந்தது. பலர் வெட்டுக்காயங்களுக்குள்ளாகினர் 10 கோடிடாலர் செலவில் இத்திரைப்படம் தயாரிக்கப்படுகிறது. இந்த ரிசர்வ் படையினர் உண்மையில் போரிட்டு தழும்புகளை பெறாத படையினராயினும் படப்பிடிப்பில் தழும்புகளை பெற்ற அனுபவப் படையினராகி விட்டனர் என இப்படையினரின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கூட்டங்களில் வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து பேசுவதில்லை. இவர்கள் பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்துள்ளனர் போல் தெரிகிறது. பிரபாகரனைப்பற்றி பயத்தினால் இவர்கள் பேசுவதில்லை. எமது பிள்ளைகளுக்கு நாம் கார், சொத்து, சுகம், நகை, மாணிக்கம், வீடு என்பவற்றை கொடுக்கவேண்டியதில்லை.

இன்று நாடு பிரிவடைவதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. தீர்வு ஒன்று கிடைக்கும் தேர்தலாக நாம் இதை கருதுகின்றோம். எமது இனத்தின் எதிர்காலத்திற்கு இத் தேர்தல் மூலம் தீர்வு காண்போம் 36 கட்சிகள் போட்டியிடினும் ஐ. தே. க பலமாக உள்ளது. அநுரா பண்டார நாயக்கா இருந்த சுதந்திரக் கட்சி இன்றில்லை. கைசின்னம் இன்று கதிரை சின்னமாகிவிட்டது. சுதந்திரக்கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணியாகிவிட்டது. 16 ஆம் திகதிக்கு பின் அது கதிரையை பிடிக்கமாட்டாது என டி. பி விஜேதுங்கா மேலும் தெரிவித்தார்.

# பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் வடபிராந்திய உதவிப்பதிவாளர் நாயகமாகவும் கடமையாற்றிய திரு. ஜே. என். போர்மன் அவர்கட்கான பிரிவுபசார் விழா இன்று மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பிரிவுபசார விழாவினை வடபிராந்தியக் காணி, மாவட்டப் பதிவக ஊழியர்களும் பதிவாளர்களும் பிரசித்த நொத்தாரிசுமாரும் இணைந்து நடாத்தவுள்ளனர்.

னர்.

அடுத்து ஆண்களுக்கான இறுதியாட்டம் **A. L.** யேசுராஜன் தலைமையிலான பல்கலைக்கழக **'A'** அணிக்கும் **H.J.S** மோசேஸ் தலைமையிலான பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணிக்கும்இடையில் ஆரம்பமானது விளையாட்டு ஆரம்பமாகி 10 நிமிடத்தில் பற்றீசியன்ஸ் கோல்ட்ஸ் அணி 6 புள்ளிகளை பெற்று இருக்கையில் பல்கலைக்கழக **A** அணி எந்தவித புள்ளிகளையும் பெறாத நிலையில் காணப்பட்டது. எனினும் பல்கலைக்கழக 'A' அணியின் தந்திரமான விடாமுயற்சியான விளையாட்டால் இடைவேளையின் போது 12:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் பல்கலைக்கழக **A** அணி முன்னணியில் திகழ்ந்தது. இடைவேளைக்கு பின்பும் நடைபெற்ற கடும் போட்டிக்கு மத்தியிலும் இறுதி கட்டத்தில் யாழ். பல்கலைக்கழக 'A' அணி 31:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிவாகை சூடி இச்சுற்றுப்போட்டியின் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இவ்இறுதிப்போட்டியில் பல்கலைக்கழக அணி தலைவர் **A.L** யேசுராஜன் 6 **Baskets** ஐ போட்டு 12 புள்ளிகளை தமது அணிக்கு பெற்று கொடுத்து வெற்றியை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகித்திருந்தார். பல்கலைக்கழக அணியின் தடுப்பாளர்களாக **(Diffenders)** விளையாடும் **Bro. R J.J** காந்தன், **R.M J** ரவிராஜபுத்திரன் ஆகியோர் மிக திறமையாக விளையாடி ரசிகர்களின் அவதானிப்பில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக **A**அணி யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கூடைப்பந்தாட்ட அணிகளுடனும் மோதி வெற்றியீட்டியுள்ளது. இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் **Y.M.C.A** நிறுவ

போட்டியில் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியுடன் மோதி 2-ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. கடந்த மே மாதம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை 38:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்து சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு யாழ். மாவட்டத்திலே உள்ள கூடைப்பந்தாட்ட அணிகளில் சிறந்ததோர் அணியாக திகழ்கின்றது.

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

## 1994. 07. 27. புதன் இரவு

08. 01 - குயிலோசை ''களத்தில் காத்தான்'' சிந்து நடைக் கூத்து அங்கம் - 03

08. 20 - ஏர்முனை - பருப்புப் பயிர்களில் பூச்சி நோய்த் தாக்கம் கேள்வி பதில்

08. 30 - செய்திகள்

08. 40 - லெப்டினன்ட்கேணல் சராநினைவாக சிறப்பு நிகழ்ச்சி 'விடுதலையின்கேள்வியிலே சரித்திரம் படைத்தவர்கள்'

## 1994. 07. 28 வியாழன் காலை

07. 02 - மாவீரவணக்கம்

07. 15 - விடுதலை கீதங்கள்.

07. 30 - செய்திகள்

07. 35 - பத்திரிகைச் செய்திகள்

07. 40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# சமாதான உடன்பாட்டில் ஜோர்தான் - இஸ்ரேல் கைச்சாத்து

ஜோர்தான் மன்னர் உசைனும், இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரபீனும் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில், அதிபர் கிளிண்டனின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் முதல் தடவையாக சந்தித்து பகிரங்கமாக சிரித்தபடி கைகுலுக்கிக் கொண்டுள்ளனர்

இவ்வைபவத்தில் பேசிய யிட்சாக் ரபின் தாம் மட்டும் அல்ல, இஸ்ரேல் நாடு முழுவது மேஜோர்தானுடன் கைகுலுக்கிக் கொள்வதாகத் தெரிவித்துக்கொண்டுள்ளார்,

இச்சந்திப்பின்பின் 46ஆண்டு கால பகைமைப் போக்கை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலான சமாதான உடன்பாட்டில் இஸ்ரேலிய பிரதமரும், ஜோர்தான் மன்னரும் கையெழுத்திட்டனர். அமெரிக்க அதிபரும் இவ் உடன்பாட்டில் கையெழுத்திட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுப் போட்டி

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்துடன் இணைந்து சர்வோதயத்தின் ஆதரவுடன் இயங்கும் ஞான சூரியன் பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது-

## லெப். கேணல் சராவிற்கு மாலை அணிவித்து அஞ்சலி

மூன்றாம் ஆண்டு நினைவை முன்னிட்டு கல்வியங்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் நினைவாலயத்திலுள்ள லெப்டினன்ட் கேணல் சராவின் திருவுருவப் படத்திற்கு இன்று காலை 9 மணிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வில் அனைத்து தமிழீழ மக்களையும் கலந்து அஞ்சலி செலுத்தும் வண்ணம் வாலையம்மன் சன சமூக நிலையத்தினர் கேட்டுள்ளனர்

## பங்கீட்டுக்கு 4லீ. மண்ணெய்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் பங்கீட்டு அட்டைக்கு நாலு லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாரம் லீற்றர் 25 ரூபா வீதம் இவ் விநியோகம் நடைபெறவுள்ளது.

## காஷ்மீரினுள் ஊடுருவிய ஏழுபேர் சுட்டுக்கொலை

இந்தியாவின் காஷ்மீர்மாநிலத்தினுள் பாகித்தானிலிருந்து ஊடுருவ முயன்ற ஏழுபேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது. சுமார் முப்பதுமுதல் நாற்பது பேர் வரையில் கொண்ட ஒரு குழு ஊடுருவ முற்பட்டதாகவும், அப்போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏழுபேர் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## பளை வைத்தியசாலை பிரேதஅறை திருத்த நிதி

(தென்மராட்சி)

பளை வைத்திய சாலையின் பிரேத அறை திருத்தத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-

மேற்படி வைத்திய சாலையில் இதுவரை காலமும் பாவிக்கப்பட முடியாதிருந்த பிரேத அறை இப்போது மீண்டும் திருத்தப்பட்டு வருகின்றது- இவ் வேலைத் திட்டத்திற்கு நிதி உதவி இல்லாமையினால் தடைப்பட்டிருந்தது- தற்போது ஒதுக்கப்பட்ட எழுபத்தி ஐயாயிரம் ரூபாவில் இவ் அறை சீரமைக்கப்படுவதுடன் கட்டட வேலைகளும் நடைபெற்று வருகின்றன- இவ் அறை பல வருடக் கணக்கில் அழிந்துபோய் இருந்தமை குறிப்பிடத்தக்கது-

## நகை திருடியநபர் விளக்க மறியலில்

ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய நபர் ஒருவரை வல்வெட்டித்துறை காவல்துறையினர் கைது செய்து பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் உட்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊரிக்காட்டைச் சேர்ந்த பெண், மினிவானில் பயணம் செய்தபோது தவறவிட்ட மேற்குறித்தநகைகளைகளவாடிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அணு ஆயுத பிரச்சினை தொடர்பாக

## அமெரிக்காவுடனேயே வடகொரியா பேசும்

வடகொரியாவின் அணு ஆயுதப் பிரச்சினை தொடர்பாக வடகொரியா அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் எனவும், இது விடயத்தில் தென்கொரியா தலையிடுவதை தாம் விரும்பவில்லை எனவும் வடகொரியாவின் தற்போதைய தலைவர் கிம்-இல்-ஜொங் கூறியுள்ளார்

இதேவேளை வடகொரிய அதிபரான கிம்-இல்-சுங்கின் மறைவுக்குப் பின்னர் கொரியத் தீபகற்பப் பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும், அணு ஆயுதப் பிரச்சினை தொடர்பாக இரு கொரிய அரசுகளுக்கும் இடையில் நடத்த திட்டமிட்டிருந்த பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சாத்தியம் மிகவும் குறைவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது

ருவாண்டா அகதிகளுக்கு

## காலம் தாழ்த்தியே நிவாரண உதவிகள்

(ஸயர்)

ஜேர்மனி, இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளின் இராணுவ விமானங்கள், ஸயரிலுள்ள அகதிமுகாம்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதில் ஈடுபட்டுள்ளன. எனினும் ஆயிரக்கணக்கான ருவாண்டா அகதிகள் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர், இன்று கிடைக்கும் உதவி அவர்களுக்கு பொருத்தமான காலத்தில் முதலே கிடைக்காதமை குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆயிரக் கணக்கில் கொலையுண்டவர்களின் சடலங்களை புதைப்பதற்கான நடவடிக்கை மிகச் சிரமமானதாக இருப்பதாகவும் அதனால் சடலங்களை ஒருங்கு கூட்டி எரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் துப்புரவுத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். கோமா என்ற பகுதியில் மட்டும் சுமார் 14,000க்கும் அதிகமானோர் வாந்திபேதி நோயினால் உயிரிழந்திருப்பதாக கிரிஸ் நாட்டு தொண்டர் சேவை அமைப்பு கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர நியமனம்

(தென்மராட்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிலுனராக கல்வி போதித்து வந்த பாடசாலை ஆசிரியர்கள் 233 பேருக்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மார்ச் மாதம் 16ஆம் திகதி வழங்கப்பட்ட இந் நியமனத்தில் பளைப் பிரதேச கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட 39 ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர் என பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரட்ணம் தெரிவித்துள்ளார். (86)

## பாடசாலை சேத விபரம் கோரப்பட்டுள்ளது

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த பாடசாலைகள் பற்றிய விபரங்களை வடக்கு-கிழக்கு மாகாண சபை கோரியுள்ளது.

இது பற்றிய சுற்றுநிருபம் ஒன்று கல்விக் கோட்டங்களுக்கு வந்துள்ளது.

இச்சுற்று நிருபத்தில் இம் மாவட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாவுக்குட்பட்ட பாடசாலைகளின் சேதம் பற்றிய விபரங்களையே மாகாண சபை கேட்டுள்ளது. (யோ)

## தென்னைச் செய்கை பயிற்சி

வன்னி மாவட்டத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக தென்னைப்பயிர்ச் செய்கை பற்றிய விளக்கமும், செய்முறைப் பயிற்சியையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பரவலாக நடத்தி வருகின்றனர்.

மாவட்டமெங்கும் வட்ட ரீதியாக நடைபெறும் இப் பயிற்சி வகுப்புக்களில் பெருமளவான தென்னைச் செய்கையாளர்களும் பொது மக்களும் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ. நா. படைகளை விலக்க நிபந்தனை

பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான ஒரு திட்டத்தை அமெரிக்கா முனவைக்குமானால் அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 35 ஆயிரம் ஐக்கிய நாடுகள் படையினரை விலக்கிக் கொள்ள தயாராக இருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்றஸ் பூட்றஸ் காலி கூறியுள்ளார்.

## கூட்டணியின் வழக்கிற்கு நீதியரசர்களின் தீர்ப்பு

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தின் சரத்துக்குள் அமுல் நடத்தப்படுவது தொடர்பாக குழப்ப நிலை இருந்த போதும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக பாராளுமன்றம் கருத்தில் கொண்டிருந்தது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் நடத்தப்படுவதை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்த மனுவை விசாரிக்க மறுத்து நிராகரித்த பிரதம நீதியரசர் கூறியுள்ளார்.

அத்துடன் அரசாங்கம்தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வேலை

சகல பல்கலைக் கழகங்களும் இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் சம்பள உயர்வு மற்றும் சலுகைகள் பெற்றுக்கொள்ளுமுகமாகவும் வேலை நிறுத்தம் செய்துள்ளதாக தெரியவருகின்றது.

## உலங்குவானூர்தி

வட்டமிட்டபின் இந்த கலிபர் தாக்குதலை நடாத்தியது. இதனால் சேதம் எதுவும் ஏற்பட்டதா என்பது குறித்து தெரியவரவில்லை.

யாழ். ஸ்ரீதரில்
தினசரி: 4.00 மணி
உயிராயுதம்
தினசரி: 6.00 சனி, ஞாயிறு: 10.30, 6.00
JURASSIC PARK
இவ்விரு திரைப்படங்களுடன்
நிதர்சனம் தயாரித்து வழங்கிய
போர் முரசு
திரைப்படமும் காண்பிக்கப்படும்

## பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

கிளி/பளை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. சு. புண்ணியசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (86)

## ஆயுதங்களுடன்

மாவட்ட வேட்பாளர்களுடனான சந்திப்பு ஒன்று மன்னார் கச்சேரியில் நடைபெற்றபோது அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆயுதங்களுடன் சென்று எவரும் மக்களைச் சந்திக்கக் கூடாது எனவும்

## வன்முறையில் காயமடைந்த பிக்கு நேற்று மரணம்

தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த பௌத்த பிக்கு ஒருவர் நேற்று மரணமடைந்து விட்டதாக தெரியவருகின்றது.

கொழும்பு ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாதம்ப சுதுவெல்ல சமயவர்த்தன விகாராதிபதி ரம்படகல்லே உபரட்ண நாயக்கதேரோவே மரணம் அடைந்துள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது.

## மரண அறிவித்தல்

### பொன்னுசாமி ஜெயபாஸ்கரன்

காங்கேசன்துறையைச் சேர்ந்தவரும் தற்பொழுது இணுவில் கிழக்கு மஞ்சத்தடியில் வசித்தவருமான பொன்னுசாமி ஜெயபாஸ்கரன் (விமான திருத்துனர் சவூதி) 26-7-94 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார். இவர் பொன்னுசாமி-சொர்ணம் தம்பதிகளின் இளைய புதல்வனும் சிவபாஸ்கரன் (சந்தனககாடு, நாடக இசைக்கலைஞர்), பாலபாஸ்கரன் (ஊழியர், சீமெந்து கூட்டுத்தாபனம்), பேபி

திரைப்படமும் காண்பிக்கப்படும்

(சி-9987)

## 1-வதுபிறந்தநாள்வாழ்த்து



## ★ சிவகுமாரன் தூயவன் ★

நாவற்குழி சித்திவிநாயகர் வீதியைச் சேர்ந்த சிவகுமாரன்-ஜெயகௌரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தூயவன் [27-07-94] இன்று தனது முதலாவது பிறந்தநாளை சுவிற்சலாந்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்திமார் மற்றும் உறவினர்கள் அனைவரும் சித்திவிநாயகர் அருள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(8946) - குடும்பத்தினர்

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சென்று எவரும் மக்களைச் சந்திக்கக் கூடாது எனவும் கேட்டுக்கொண்டார்.

### இனக்கலவரம்

ந்த இந்துக்கோயில் ஒன்றை நோக்கி தமிழ் மக்கள் இடம் பெயர்ந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தன்னாட்சி

ஊழல் அதிகார துஷ்பிரயோகம் என்பனவற்றை விசாரிக்க பாராளுமன்றக்குழு அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட ஐ. தே. க. வின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகராஇவ்விசாரணைக் குழு பாராளு மன்றத்திற்கு மட்டுமே கட்டுப்படக் கூடியதாக இருக்கும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக ஊழல் குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்கு முன்னதாக சபாநாயகரின் அனுமதி தேவைஎன்பதில் சில மாற்றங்கள் கொண்டு வரப்படலாம் எனவும் தெரிவித்தார்.

### திருமலை

சோதனையிடப்படுவதாகவும் திருகோணமலை நகரப் பகுதி பொலிஸ் அதிகாரி ஆனந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் சோதனை நடவடிக்கைகளால் திருகோணமலையில் பதற்றம் ஏற்படாது தடுக்க முடியும் என தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்-

### 'மக்களின்குரல்'

தாக தேர்தல் ஆணையாளருக்கு புகார் செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து இவ் ஒலிபரப்பு இடைநிறுத்தப்படுவதற்கு தேர்தல் ஆணையாளர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

மரணமடைந்து விட்டதாக தெரியவருகின்றது.

துள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது.

## சிறுபோக நெல்விபரம் திரட்டப்படுகின்றது

தற்போது 94ம் ஆண்டிற்கான சிறுபோக நெல், மேட்டு நில புள்ளி விபரத்தரவுகளை பொருண்மியமேம்பாட்டு நிறுவனம் வடதமிழீழத்தில் திரட்டி வருகிறது.

உற்பத்தியை மதிப்பீடு செய்யும் முகமாக நெல்விளைச்சல் விபரத்தினையும், விலை நிர்ணயம் செய்வதற்காக உற்பத்தி செலவு விபரத்தினையும் எழுமாற்று மாதிரித் தெரிவு முறையில் தெரிவு செய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகாம்பிகைக் குளத்திலும், வவுனியா மாவட்டத்தில் கனகராயன் குளத்திலும் இவ்வாறான நெல் விளைச்சல் மதிப்பீடு நெல் உற்பத்திச் செலவு விபரம் திரட்டல் என்பன முடிவடைந்துள்ளன.

இத்தரவுகள் உற்பத்தி தொடர்பான ஆய்வினை மேற்கொள்வோர் உற்பத்திக்கான உள்ளீடுகளான உரவகைகள், மண்ணெண்ணெய், விதைவகைகள் கிருமிநாசினிகள் போன்றவற்றினை வழங்குபவர்கள் நுகர்வோர், உற்பத்தியாளர் பாதிக்காத வகையில் விலை நிர்ணயம் செய்வது போன்ற பல முக்கிய தேவைகளுக்கும் இப் புள்ளிவிபரங்கள் உதவுவதால் இத்தரவு திரட்டல்களுக்கு ஒவ்வொரு செய்கையாளர்களும் தம்மாலான முழு ஒத்துழைப்பினையும் வழங்குமாறு தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் புள்ளி விபரக் கிளையினரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

### வறுமைநிலை

வரி நிவாரண்ங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுப்பது இந்நாட்டின் அதிகமான மக்களை நாளுக்கு நாள் வறிய நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஐ. நா. விவசாய அபிவிருத்தி நிதியத்தின் அறிக்கையில், கடந்த 20 ஆண்டு கால எல்லையினுள், 114 நாடுகளின் வறுமை நிலை 40 சதவீதமாக அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவற்றில் அதிவேகமாக வறிய நிலையை அண்மித்த 5 நாடுகளிடையே இலங்கை முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### யாழ் இல்

மாக யாழ். குடா நாட்டிலுள்ள ஐந்தரை இலட்சம் வாக்காளர்களில் பதினைந்தாயிரம் பேரே வாக்களிக்கப் போகும் நிலையில், இத் தேர்தல் ஜனநாயக பூர்வமாக எப்படி இருக்கப் போகிறது?

யாழ். குடா நாட்டில் ஏழு இடங்களை கைப்பற்றப் போவதாக இராணுவச் சார்பு ஆயுதக் குழு கூறுகின்றது. ஆளுங் கட்சி, தன் கைக்கூலிகளால் முறைகேடாக சகல இடங்களையும் கைப்பற்ற வைக்காமல் தடுப்பதற்கும், எமது அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்குமே நாம் போட்டியிட தீர்மானித்துள்ளோம் என அவர் அப் பிரசாரத்தில் கூறினார்.

### தேர்தல்

தப்படும் இராணுவத்தினர் பொலிஸ் தலைமை அலுவலகத்தினூடாகவே பயன்படுத்தப்படுவர் எனவும் அவ் அதிகாரி தெரிவித்தார்-

தேர்தல் நடவடிக்கைகளுக்காக விசேட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட இருப்பதாகவும் இப் பிரிவு வன் செயல்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் இடங்களுக்கு உடனடியாக அனுப்பப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்-

இவர் பொன்னுசாமி-சொர்ணம் தம்பதிகளின் இளைய புதல்வனும் சிவபாஸ்கரன் (சந்தனககாடு, நாடக இசைக்கலைஞர்), பாலபாஸ்கரன் (ஊழியர், சீமெந்து கூட்டுத்தாபனம்), பேபி சரோஜா, தவபாஸ்கரன், குணபாஸ்கரன் (வர்த்தகர், நவீன சந்தை), பாஸ்கரன் (மாவீரன் லெப். கேணல் ஜஸ்ரின்) ஆகியோரின் சகோதரரும் சி. சரஸ்வதி, பா. பாலயோகினி, த. சிவயோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும். சுயந்தன், பாலகரன், லால்கரன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்.

இணுவில் கிழக்கு, சந்தனக்காடு பாஸ்கரன்

மஞ்சத்தடி. (8949) (சகோதரர்)

## மரண அறிவித்தல்

## கௌரிதாஸ் செல்வமலர் (மலர்)

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 31/5 இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய கௌரிதாஸ் செல்வமலர் அவர்கள் 25-07-94 அன்று அகாலமரணமடைந்தார். இவர் காலஞ்சென்ற செல்லத்துரை வள்ளியம்மா அவர்களின் புதல்வியும் கௌரிதாசின் மனைவியும், விசாலாட்சியின் மருமகளும், காலஞ் சென்ற மாரி ஆசாரி பார்வதியின் பேர்த்தியும் ஆவார். சசியந்தி (யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), தர்மறோஜினி (யாழ் சென்ஜோன்ஸ் பாலர் பாடசாலை) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற ஜெயராணி, திருமதி சிறீதரன் பத்மாவதி (புஸ்பா), கணேசமூர்த்தி (யாழ்), மங்களேஸ்வரன் (விசுவமடு). திருமதி செல்வராசா வசந்தகுமாரி (விசுவமடு), இராமதாஸ் (பருத்தித்துறை), காலஞ்சென்ற பாஸ்கரன் ஆகியோரின் சகோதரியும், சிறீதரன் (சவுதி), திருமதிகணேசமூர்த்தி நாகராணி, மங்களேஸ்வரன், ராணி, செல்வராசா, இராமதாஸ்மோகனா, திருமதி சுதந்திரராசா மஞ்சுளா தேவி, திருமதி யோகபாலன் ரமணி திருமதி செல்வராசா கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், சாந்தி ஜெயசிறீதரன் (தீசன்), கௌரி (பொபி), வாகினி (ரூபி), முருகானந்தன், ருசாந்தினி, அருண்பிரதாப், சிந்துஜா ஆகியோரின் சிறியதாயாரும், குமரேஸ்வரன், தர்மினி, தர்சினி, மதிவண்ணன், சுஜிதா ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27-7-94 இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு தகனக் கிரியைகளிற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

க. கௌரிதாஸ்

(கணவன்)

(8948)